


# ரமணோதயம்

அக்டோபர் 2023
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



# ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 23 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2023

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2023

| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | வேதாந்த விசாரம் – அத்தியாயம்-7 | ஏ.வி. ராஜகோபாலன் | 15 |
| 3 | ஔவைக் குறள் | விளக்கம்: ராம் மோஹன் | 24 |
| 4 | இடையறாப் பேச்சு | D. தியாகராஜன் | 28 |
| 5 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 41 |
| 6 | தேசிய எழுச்சிக்கு ஸ்ரீரமண மகரிஷி அளித்த கொடை | Dr. வேங்கட். S. ரமணன் | 48 |
| 7 | வல்லியத்து வாய்ப்பட்ட மான் | D. தியாகராஜன் | 57 |
| 8 | ரமண புராணம் | ஆகுரா | 64 |
| 9 | இனிவரும் திருநாட்கள் | | 70 |
| 10 | செய்திகள் | | 71 |

# ஆசிரியர் உரை

## எல்லையற்ற ஆனந்தத்தின் திறவுகோல்

அடிமைத்தளை எப்படி நம்மைச் சிக்க வைக்கிறது! ஆசைப் பிணைப்புகளே அடிமைத் தளைகள் என்கிறார் பகவான். இதன் தொடர்பாக புத்தருக்கும், தந்தை சுத்தோதனருக்கும் ஏற்பட்ட சந்திப்பைப் பற்றி பகவான் விளக்குகிறார். புத்தர் பிரான் போதி மரத்தடியில் ஞானோதயம் பெற்ற பின் கபிலவஸ்து அரண்மனைப் பக்கம் வராமல் துறவு வாழ்க்கை வாழ்ந்து நாடு முழுவதும் தர்மத்தைப் பரப்பி வந்தார். அப்போது ஒரு சமயம் சாக்கிய நாட்டின் தலைநகருக்கும் விஜயம் செய்கிறார். ஒற்றை ஆடையுடன் மழித்த தலையுடன் வந்த புத்தரைத் தந்தை சுத்தோதனர் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. புத்தரின் மனைவி யசோதரா மட்டும் அந்தத் துறவியின் மெய்ம்மையை அறிந்துகொண்டு தன் மகன் ராகுலனையும் அழைத்துச் சென்று அவரை வணங்கினாள். இதன் பின்னர்தான் தனது தலைநகருக்கு வருகை தந்திருக்கும் துறவி யார் என்பது தந்தைக்குப் புலப்பட்டது. புத்தரைச் சந்தித்து, "ராஜ்ஜியம் அனைத்தையும் உதறிவிட்டு பிச்சைக்காரனாகத் திரிகின்றாயே? இதனால் என்ன பயன் கண்டாய்?" என்று கடுமையாகக் கடிந்து கொள்கிறார். அந்தச் சுடு சொற்களால் சற்றும் பாதிக்கப்படாத புத்தர், தந்தை பேசி முடித்தவுடன், அமைதியாகத் தன் அருள் விழியால் நோக்கினார். அக்கணமே சுத்தோதனரின்

பற்றுக்கள் அறுபட்டு அவரும் தன் பட்டம், ராஜபோகம் அனைத்தையும் துறந்து துறவி ஆனார்.

சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே –
தாயுமானவர், பராபரக்கண்ணி 169

என்ற தாயுமானவர் பாடல் நினைவுக்கு வருகிறது அல்லவா.

“பல வெற்றிகளை அடைந்த சுத்தோதனர் மனம் புத்தரின் அருட் பார்வையில் அந்தக் கணமே அடங்கி ஒடுங்கியது. ஞானியின் அருட் பார்வையினால் சுத்தோதனரின் பற்றுக்கள் அனைத்தும் எரிந்தன. பற்றற்ற நிலையில் பேரின்ப நிலையைப் பெற்றார் தந்தையார்” என்றார் பகவான்.

பகவானின் அருட்பார்வை பட்ட அனைத்து அடியார்களும் பெற்ற அனுபவம் இது.

மஹாராஷ்டிரத்தில் இருந்து வந்த அன்பர் பகவானிடம், “ஆசைகளால் சஞ்சலிக்கும் மனத்தை எங்ஙனம் கட்டுப்பட்டுவது? தியானம் எங்ஙனம் செய்வது” என்னும் ஐயத்தை எழுப்பினார். பகவான் அவருக்கு தியானத்தைப் பற்றி விளக்கிக் கீதையின் ஆறாவது அத்யாயத்தில் உள்ள ஸ்லோகங்களைக் கூறி விளங்க வைத்தார். அதில் ஒரு சுலோகம்:

யதோ யதோ நிஶ்சரதி மனஶ்சஞ்சலமஸ்தி²ரம் ।
ததஸ்ததோ நியம்யைதத³த்மன்யேவ வஶம் நயேத் ॥
(6.26)

பகவான் இதன் பொருளைக் கூறி விளக்கியதாவது:

மனம் இயல்பாகவே சஞ்சலமானது. ஓரிடத்தில் நிலைகொள்ளாது அலையும் தன்மை பெற்றது. நாம் தியானம் செய்ய முயலும்போது மனம் கட்டுப்படாமல் அலைவதற்கு இதுவே காரணம். உலகப் பொருள் மீதுள்ள நீங்காத ஆசையினால் அவற்றைத் தேடி அலையும்

மனத்தைக் கட்டுப்படுத்தி ஆன்மாவின்மீது அது பதிந்து இருக்கச் செய்ய வேண்டும்.

இந்தக் கீதை சுலோகத்தினை தமது எழில்மிக்க பகவத்கீதா சார வெண்பாவில் விளக்குவதை ரசிப்போம்.

*எதுவும் திரமின்றி என்றும்அலை சித்தம்*
*எதுஎதனைப் பற்றியே ஏகும் — அததனின்று*
*ஈர்த்துஅந்தச் சித்தத்தை எப்போதும் ஆன்மாவில்*
*சேர்த்துத் திரம்உறவே செய்.*

*பகவத் கீதாசாரம் (28)*

மனத்தை அடக்கும் வழியை பகவான் தெளிவாக்க தனது கீதாசார வெண்பா 27ஆவது பாடலில் கூறுகிறார்.

*தீரஞ்சேர் புத்தியினால் சித்தத்தை மெல்லமெல்ல*
*நேரச் செயவேண்டும் நிச்சலன — மாரதனே*
*சித்தத்தை ஆன்மாவில் சேர்த்திடுக மற்றெதுவும்*
*இத்தனையும் எண்ணிடா தே.*

பகவானின் இந்த நேரிய வெண்பாவின் பொருள்:

மஹாரதனாகிய அர்ஜுனனே! அந்தப் பூர்ண நிர்வாணம் பேரின்பத்திற்காக முயன்று மிகுந்த தைரியத்தோடும் கூடிய விவேகத்தால் மனத்தை ஆன்மாவில் நிலைபெறச் சேர்ப்பாயாக. வேறு எதையும் கொஞ்சங்கூட நினைக்க வேண்டாம் என்கிறார்.

இதே கருத்தை முண்டப உபநிடதமும் ஓர் அழகான உவமை மூலம் விளக்குகிறது.

*ப்ரணவோ த⁴நு: ஶரோ ஹ்யாத்மா ப்³ரஹ்ம*
*தல்லக்ஷ்யமுச்யதே ।*
*அப்ரமத்தேன வேத்³த⁴வ்யம் ஶரவத் தன்மயோ ப⁴வேத்*

*(முண்டக உபநிடதம் 2.2.4)*

பொருள்: ஓங்காரம் என்னும் தியானமே வில். ஆன்மாவே அஸ்திரம் (அம்பு). ப்ரம்மமே நாம் எய்ய வேண்டிய லக்ஷ்யம். அம்பை எய்பவன் அலைபாயாத மனத்துடனும் தன் நோக்கத்தில் தவறாமல் இருந்து

அம்பை எய்ய வேண்டும். இலக்கின்மீது குறி தவறாது பாய்ந்த அம்பு அந்த இலக்கு மயமாகவே ஆக வேண்டும்.

இந்தப் பயிற்சிக்குத் தேவையானவை:

1. வில்லின் நாண் சரியாக வில்லில் பொருந்திக் கட்டப்பட்டு இருக்க வேண்டும்.

2. அம்பு முனை மழுங்காமல் கூரியதாக இருக்க வேண்டும்.

3. அம்பு லக்ஷ்யத்தின்மீது சரியாகத் தாக்கும் வகையில் நேர்கோட்டில் அமைய வேண்டும்.

அப்படி அம்பு எய்தால், அம்பு இலக்கை அடைந்து அதனுடன் ஒன்றாகும்.

இந்த அழகிய உவமையில் முதல்படி, நான் எனப்படும் மனம். வில் என்பது ஓங்காரமாகிய மந்திரம். மனம் ஓங்கார தியானத்துடன் சரியாகப் பொருந்தி பிணைக்கப்பட்டு இருக்க வேண்டும். அதாவது மனம் ஓங்காரத்திலேயே இடைவிடாது ஆழ்ந்து இருக்க வேண்டும். மனம் அலைபாயாது இருக்க ஆசைகளை விலக்கி, மனம் எப்போதும் இறைவனைப் பற்றியே எண்ணி இருக்க வேண்டும்.

அம்பு கூர்மையாக இல்லாவிடில் அது லட்சியத்தில் போய் தைக்காது விழுந்துவிடும். எனவே அம்பு தீட்டப்பட்டு இருக்க வேண்டும். அதுபோல் நாம் இடைவிடாது யோகம், தியானம் போன்ற சாதனைகள் மூலம் பயிற்சி பெற்று கூர்மையாக இருக்க வேண்டும். இதனையே பகவான் உள்ளது நாற்பது 28ஆவது பாடலில் ஆன்ம விசாரணை செய்யும் முறை பற்றிக் கூறும்போது கூர்ந்த மதியால் பேச்சுமூச்சு அடக்கி உள்ளே ஆழ்ந்து அறிய வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

கடைசித் தேவையாக அம்பு திசைமாறாது நேர்க் கோட்டில் நிறுத்தப்பட்டு தொகுக்கப்பட

வேண்டும். இதையே ‘அப்ரமத்தோ வேத்³த்⁴யம்’ என்ற சொற்றொடரால் ரிஷி குறிப்பிடுகிறார். நமது லக்ஷ்யமான ப்ரம்மத்தை உள்ளபடி அறிய வேண்டும் எனில் நாமும் தெய்வீக அநுபூதி பெற வேண்டும். இதுவே அம்பு நேர்க்கோட்டில் அமைய வேண்டும் என்று உபமிக்கப்படுகிறது.

விஷய வஸ்துக்களின் மீது சிறிதும் பற்றின்றி மிக மிகக் குறைந்த தேவைகளுடனே மட்டும் வாழ்ந்தவர் பகவான். நமது துறவி ராஜரின் ஜயந்தி தினம் அன்று பரோடா மஹாராணி ஜரிகை போட்ட வெல்வெட் சால்வையை அனுப்பி இருந்தார். அதை பகவான் பயன்படுத்துவதற்காக அணுக்கத் தொண்டர் விரித்துப் போட்டார். பகவான் அதன் மீது அமராது விலகி அமர்ந்தார். தொண்டர் உடனே, பகவான் அமர்ந்த அந்த இடத்தில் மீண்டும் விரித்தபோது, பகவான் அதனின்றும் மீண்டும் விலகி இருந்தார். இறுதியில் சால்வையை ஆச்ரம அலுவலகத்துக்கே எடுத்துச் செல்ல நேர்ந்தது. பகவான் அன்பர்கட்கு விளக்கிக் கூறினார். எளிய வாழ்க்கையின் சுதந்திர உணர்வை வசதிகள் அழித்து விடுகின்றன. பொருட்கள் கூடக்கூட சுதந்திரத்தை இழந்து விடுகிறோம். ஆசையை வளர விட்டால் சாந்தி பறிபோகின்றது.

டாக்டர் சையது என்ற தீவிர சாதகர் பகவானிடம் வினவினார்: “ஆசைகளை அறவே அறுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். சம்சாரத்தில் இருந்து விடுபட ஆசைப்படுவதும். இறைவனை அடைய விரும்புவதும்கூட ஆசைகள் தானே? அவை நல்ல ஆசைகள் அல்லவா? இவற்றையும் அழித்து விட வேண்டுமா?” என்று வினவினார்.

பகவான் இதற்கு அளித்த விடை, “ஆன்மிகத்தின் இறுதிநிலை சம்பூர்ண சரணாகதியே. ஆண்டவனிடம் நாம் முழுமையாகச் சரண் அடைந்து விட்டால், பின்

நமக்கு என்று ஆசை எதுவும் இருக்க முடியாதே! அவனாக முடிவு செய்து நமக்கு முக்தி அளித்தால் அளிக்கட்டும். நாம் ஏன் அதற்கு ஆசைப்பட வேண்டும்?" என்பதே.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்

என்று திருமந்திரம் அறிவுறுத்துகிறது அல்லவா?

தனிப்பட்ட மனிதனின் ஆணவம், தன்முனைப்பு வளர்ந்து நிற்பதால் அவன் ஆசைகளை வளர்த்துக் கொள்கிறான். இறைவனிடம் முழுமையாகச் சரண் அடைந்தபின் அவனுடைய அகங்காரம் முற்றிலும் நசித்துப் போகிறது. அவன், தான் ஒரு தனி மனிதன் அவனுக்கு என்று தனி சங்கல்பம் உண்டு என்பது முற்றிலும் அழிந்துபோய் அக்கணத்தில் இருந்தே ஈஸ்வர சங்கல்பங்களே அவனுடைய சங்கல்பங்களாக மாறிவிடுகின்றன.

மற்றொரு சாதகர், "தான் தியானம் செய்ய முயலும்போது எல்லாம் மனம் வெளிப் பொருட்கள்மீது தாவிச் செல்கிறது. தியானத்தில் முற்றும் ஆழ என்ன செய்ய வேண்டும்?" என வினவினார்.

பகவான், "இது மனதின் இயல்புதான்" என்று குறிப்பிட்டு "மனம் எது தனக்கு மகிழ்ச்சி தரும் என்று நினைக்கிறதோ அதையே ஆவலுடன் பின்பற்றிச் செல்லும். வெளி விஷயங்களின்மேல் எழும் ஆசையைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளப் பழகிய மனம் அவற்றைப் பின்பற்றிச் செல்வதை இறுதியாக நிறுத்தி விடும். புலன்களின் இலக்காகிய விஷயங்களில்தான் இன்பம் உள்ளது என்று நினைக்கின்ற வரையில் மனம் அவற்றை நாடிச் செல்வது இயற்கையே. அவற்றில் நிலையான இன்பம் இல்லை என்பதை உணர்ந்தால் மனம் வெளியே செல்வதை நிறுத்திவிட்டு, உண்முகமாக திரும்பும்" என்கிறார்.

*ரமண பகவான் தனக்கு அளித்த உபதேசம் எது என வினவும்போது முருகனார், "தொடர்ந்து வரும் அவாக்களே சம்சார பந்தத்திற்குக் காரணம். இந்த அவாக் கூட்டத்தை அழித்தல் பேரின்பமாகிய முக்தி நிலை" என்று குறிப்பிடுகிறார்.*

*அவாவே பிறப்புஅவ் அவாவை அறுத்தலே*
*தவாப்பே ரின்பம் ததும்பிய வீடெனக்*
*குருவாய் வந்துஎன் குடிமுழுது ஆளத்*
*திருவாய் மலர்ந்துஅருள் செய்தாய் போற்றி*

*– உபதேசத் திருவகவல் (63–66)*

*இதே கருத்தை ஸ்ரீ ரமண ஞான போதத்திலும் முருகனார் அறுதியிட்டுக் கூறுகிறார்.*

*இருட்பாழ் அகல இதயத்து எழுந்த*
*புரிப்பான சுத்தஅருட் போத சொரூபன்*
*சுரப்பான மோன சொரூபஅனு பூதி*
*விருப்பால் ஒழிந்ததுஅயல் வேட்கை எல்லாமே*

*– (ஸ்ரீ ரமண ஞான போதம், விஷய வேட்கையறல் 5–57)*

*அஞ்ஞான இருள் நீங்கும்படி என் இதயத்தில் மலர்ந்த ஞான ஸ்வரூபனாம் ரமணன் சொரிந்த அனுபூதியினால் என் உள்ளத்தில் இருந்த ஆசைகள் எல்லாம் அழிந்தன என்று ஆசைகளை அழிக்கும் உபாயம் பகவானின் அருள் அனுபூதியை நாடுதலே என்கிறார் முருகனார்.*

*மீண்டும் மீண்டும் ரமண ஞானப் பாடல்கள் அவா அறுத்தலே ஆத்ம ஞானத்திற்கு இன்றியமையாதது என்று கூறுகிறது.*

*தெளிந்த சொரூப அருட்செல்வமென்று உள்ளத்து*
*அளைந்ததால் அற்றது அவா*

*– (ரமண ஞானபோதம் 5, அவாவறல், 60)*

*ரமணன் அருளிய இந்த ஞான அநுபூதியினால் ஆசைகள் மட்டுமல்ல, அதனுடன் சேர்ந்து, மனமும் முற்றிலும் அழிந்து போய்விட்டது.*

*இந்த சொரூப அநுபூதியினால் அவாக்கள் முற்றிலும் அழிந்த பின்னர் சுத்த மௌனத்தில் எழும் பேருணர்வு என்னை முழுவதுமாக ஆட்கொண்டு விட்டது என்கிறார் அடியார்.*

*ஆசையறச் செற்ற அருட்பரையால் ஆர்ந்தது எனக்கு*
*ஓசை அற்ற மோன உணர்வு –*
*(ரமண ஞான போதம் 5, அவாவறல் 62)*

*இந்தச் சொரூப உணர்வு ஆகிய அத்வைத சமாதி என்னுள் அடைந்தபின்னர் ஆசை அச்சம் எல்லாமே ஒழிந்துபட்டன. அகந்தை அழியும்போது, பற்றுக்கள் அனைத்தும் அழிந்து, அனுபூதி சுடர் விடுகின்றது.*

*ஆசா நிகளம் துகளாயின பின்*
*பேசா அநுபூதி பிறந்ததுவே.*

*என அருணகிரிநாதரும் அறுதியிட்டுக் கூறுகிறார்.*

*சித்த விருத்திகள், மனத்தின் முனைப்புகள் முற்றிலும் நீங்கிய இந்நிலையை பெருத்த பேரின்பம் என முருகனார் குறிப்பிடுகின்றார். எப்படி இந்நிலையை அடைவது என்பதை இதுகாறும் கண்டோம். இந்நிலையை அடைய விருப்பு, வெறுப்பு இரண்டும் நீக்கி, ஆசை எனும் ஆலகாலம் கடந்து, செல்வதே பொருத்தமான வழி என்று முருகனார் புகல்கிறார்.*

*பெருத்த பேரின்பம் என்பர் பேரறிஞர் சித்த*
*விருத்தி அனைத்தும் விளிவைக் – கருத்தின்*
*இராகத் துவேஷம் இரண்டும் அகன்ற*
*நிராசையே நல்ல நெறி – (குருவாசகக் கோவை, 374)*

*நான் கட்டுப்பட்டு உள்ளேன் அல்லது நான் விடுதலை அடைந்துவிட்டேன் என்ற இரட்டை உணர்வுகள் ஏதும் இல்லாத நிலையில் ஸஹஜ நிலையில் நிற்பதுதான்*

உண்மையான வாழ்வு. அதுவே உண்மையான சரணாகதி. இறைவனை முற்றிலும் சரண் அடைந்து, அவன் வழி நடத்தல்படி வாழ்வதுதான் உண்மையான வாழ்வு.

உபதேச உந்தியாரின் இறுதி 29ஆவது பாடலிலும் பந்தம்-விடுதலை என்ற மாறுபட்ட நிலைகளை எல்லாம் கடந்து, எல்லையற்ற பேரின்ப நிலையில் சிறிதும் வழுவாது இடையறாது நிற்பதே கடவுளிடம் முற்றிலும் சரண் புகுந்தவர் வாழும் நெறி என அறுதியிட்டுக் கூறுகிறார் பகவான்.

பந்தவீ டற்ற பரசுகம் உற்றவாறு
இந்த நிலைநிற்றல் உந்தீபற
இறைபணி நிற்றலாம் உந்தீபற.

ஆத்ம விசாரத்தின் மூலம் தன்னுடைய இயல்பான நிலையானது எது, அது எப்படிப்பட்டது என்று ஐயம் திரிபறத் தெரிந்து கொண்டால் அது தொடக்கமற்றதும் முடிவற்றதும் ஞான வடிவானதும் ஆன ஆத்மாவே. அதுவே இடைவெளியில்லாது எங்கும் நிறைந்த பரிபூரணமான ஆனந்தம் என்கிறார் பகவான்.

இந்த எல்லையில்லா அன்பு நிலையை எய்தும்போது எதிலும் பற்றில்லாதவனாகி அதேசமயம் தான் தாங்கிய மனித வேடத்திற்குத் தகுந்தபடி புற உலகில் கடமைகளைச் செய்து கொண்டு உலக வாழ்க்கையை விளையாட்டு போல நடத்துவாயாக என்று உள்ளது நாற்பது அநுபந்தம் 27ஆம் பாடலில் கூறுகிறார்.

மால்எனும்பல் கட்டுவிடு பட்டோ னாகி
மன்னுசம னாகிஎல்லா நிலைமைக் கண்ணும்
வேலைகள் வேதத்தியை வெளியில் செய்து
வேண்டியவாறு உலகில்விளை யாடு வீரா

இங்ஙனம் இருப்பது மிகக் கடினமானது போன்று தோன்றுகின்றதே என்றால், இல்லை! இல்லை! அது மிகச் சுலபமானது என்று ஆன்மவித்தை 4 ஆவது பாடலில்,

*கன்மாதி கட்டுஅவிழ சென்மாதி நட்டம்எழ*
*எம்மார்க்கம் அதனினும் இம்மார்க்கம் மிக்குஎளிது*
*சொல் மானததனுவின் கன்மாதி சிறிதுஇன்றி*
*சும்மா அமர்ந்திருக்க அம்மா! அகத்தில்ஆன்ம –*
*ஜோதியே; நித அனுபூதியே; இராது பீதியே;*
*இன்ப அம்போதியே.*

அகந்தை உண்டேல் அனைத்தும் உண்டாம். அகந்தை எழுவதால்தான் வாழ்வின் அத்தனை பிரச்சனைகளும் எழுகின்றன என்று கூறிய பகவான் அகந்தை நாசமுறச் செய்யும் வழியையும் உபதேசிக்கின்றார். சஞ்சிதம், ஆகாம்யம், ப்ராரப்தம் என்ற மூவகை பந்தங்களும் நம்மை வாழ்வுடன் பிணைக்கின்றன. இதற்கு மூலகாரணம் 'நான் செய்கிறேன்' என்கின்ற தன்முனைப்பு. இதை அழிப்பதற்கும் யோகம், தியானம், பக்தி போன்ற பல வழிகள் இருந்தாலும் மிகவும் எளிதான நேர்வழி ஆத்ம விசாரமே என்று பகவான் கூறுகிறார்.

இந்த ஆத்ம விசாரம் செய்ய மனம், சொல், செய்கை இவற்றின் துணை எதுவுமே தேவையில்லை. ஆத்ம விசாரத்தின் கொடுமுடியில் உள்ளத்தில் ஆத்ம ஜோதி எழுந்து பிரகாசிக்கின்றது. இங்கு ஆத்மானுபவம் பொங்கித் ததும்புகின்றது. அச்சம் அழிகின்றது. பரமானந்தம் பொங்கித் ததும்புகின்றது.

*அகண்டாகார சிவ*
*போகம் என்னும் பேரின்ப வெள்ளம்*
*பொங்கித் ததும்பிப்*
*பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ.*

என்று இதே கருத்தை தாயுமானவர் வலியுறுத்திக் கூறுகிறார். ஏன் எங்கேயோ போய்த் தேடுகிறீர்கள். எல்லையற்ற சிவானந்தம் என்னும் பெருவெள்ளம் முற்றிலும் முழுமையாய் அத்வைத பரமாய் உன்னுள்ளேயே இருக்கின்றதே என்கிறார் தாயுமானவர்.

*வெளி விஷயங்களைப் பற்றித் திரியும் மனத்தை உள்முகமாகத் திருப்பி தனது இயல்பான நிலையில் இருக்கச் செய்தால், உலகில் எத்தகைய துயரும், துன்பமும் நேராது என உறுதி கூறுகிறார் பகவான். (ஞானாசார விசாரப் படலம் 18). அந்தப் பற்று நீங்கிய உடனேயே உள்ளே பொங்கும் எல்லையில்லா ஆனந்த நிலையை 29ஆம் பாடலில் பகவான் கூறுகிறார்.*

*ஆகாயம் போல் அகிலத்து அகம்புறமும்*
*ஏகாங்க மாய்உருவம் இன்றியதாம் – ஆகா*
*பரமானந் தத்துள் படிந்தவர்அன்பேயப்*
*பரமானந்தம் படிவர் பார். – (தேவிகாலோத்தரம் 29)*

*பொருள்: பூரண வஸ்துவானது, ஆகாயத்தைப் போல் அகில புவனங்களின் உள்ளேயும் வெளியேயும் ஒரே ஸ்வரூபமாய் வியாபித்து எங்கும் நிறைந்து உருவம் அற்றதாய் விளங்குகிறது. அத்தகைய ஆனந்தத்தில் தோய்ந்தவர் அந்த எல்லையில்லா ஆனந்த வடிவமாகவே ஆகி விடுவர்.*

*.. அகங்காரம் நீக்குவதாம் அச்சித்தே முக்தி*
*சுகம் கொடுப்பதென்று துணி (தேவிகாலோத்தரம் 67)*

*ஆணவத்தை நீக்கும்போது இதயக் கமலத்தில் ஆன்மாவே முக்தியைத் தரும் என்கிறார் பகவான்.*

*அகங்காரம் நீங்குவதற்கும் முக்தி வந்து சேரற்கும் இடைவெளியே இல்லை. ஆணவத்தை நீக்கும்போதே இதயக் கமலத்தில் பிரகாசித்துக் கொண்டு இருக்கும் பூர்ண ஞான வடிவான ஆத்மா முக்தி ஆனந்தத்தை நல்கும் என்கிறார் பகவான். அகந்தை நீங்கி ஆன்மாவைத் தன்னுள் ஆழ்ந்து அறிவதால் இது அடையப் பெறுகிறது என்கிறார் பகவான்.*

*இதுமட்டுமன்றி தமது பகவத் கீதாசார நூலின் 26 ஆவது பாடலில் (கீதை அத்யாயம் 5–28 ஆவது பாடலின் தமிழாக்கம்) ஆசையும் கோபமும் நீங்கி, எண்ணங்கள்*

எல்லாம் அடங்கிய மனமுடையவராய், ஒளிவடிவம் ஆன்மாவை அறிந்துணர்ந்த ஞானிகள், பற்றற்ற ஞான போதம் பெற்றவர்களாகிய அவர்களுக்கு பரிபூர்ண நிலை எப்போதும் சாஸ்வதமான அனுபவம் ஆகின்றது என்று விளக்குகிறார் பகவான்.

இந்த நமது உரையாடலின் இறுதியாக யோகானந்த ஸ்வாமிகளின் எல்லையற்ற நிலையை எப்படி அடைவது? என்ற கேள்விக்கு பகவான் கூறிய விடையைக் காணலாம்.

ஆனந்தம் இப்பொழுதில்லாது இனி அடையப் போவது ஒன்று அன்று. நம் ஸ்வரூபமே ஆனந்தம். இதை உணராததால் மனதில் குற்ற உணர்ச்சி எழுகிறது. இதுவே இந்தக் கேள்வியை எழுப்புகிறது. இங்ஙனம் யாருக்குக் குறை எழுகிறது என்பதைத் தியானிக்க வேண்டும். தூக்கத்தில் ஆனந்தமாக இருக்கிறோம். விடியலில் அவ்வாறு இல்லை. ஏன்? இடையில் 'நான்' என்னும் தன்முனைப்பாகிய போலித் தோற்றத்தின் எழுச்சியே அந்த ஆனந்த ஸ்வரூபத்தை மறைக்கிறது. அந்தத் தடை நீங்கி அகந்தையின் மூலம் எது என நாட வேண்டும். அந்த நாட்டத்தினால் அகந்தை தன் மூலத்தில் மறைய தனது உண்மை ஸ்வரூபமான எல்லையற்ற ஆனந்தம் தடையற்று ஒளிர்கிறது. சந்தேகப் பூட்டுக்கள் அனைத்தையும் திறக்கும் அற்புதச் சாவி இந்த உள்முக நாட்டம். அதுவே எல்லையற்ற ஆனந்தத்தின் திறவுகோல் என்று விளக்குகிறார் பகவான். (திருவருண்மொழி 106) இதுவே இறுதி உண்மை.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# வேதாந்த விசாரம்

## அத்தியாயம் - 7

## விசாரம் என்றால் என்ன?

## டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

விசாரம் என்னும் சொல் வேதாந்தத்தில் அடிக்கடி வரும். ஒரு விஷயத்தைப் பற்றித் தொடர்ந்து தேடுதலில் ஈடுபடுவதை இந்தச் சொல் குறிக்கும். இது தத்துவ உலகில் பண்டையக் காலம் தொட்டு ஏற்கப்பட்ட ஒரு நிலைப்பாடு. கிரேக்க தத்துவ உலகின் மாபெரும் சிந்தனையாளரான பிளாட்டோ "*Thinking – the talking of the soul with itself*" என்று சொல்வான். ஆத்மா தனக்குள் நடத்தும் உரையாடலே எண்ணம் என்பதாகும் என்பது அவன் கருத்து. இது தனிப்பட்ட முறையிலோ, ஒரு குழுவாகவோ அல்லது சம்பாஷணையாகவோ அமையலாம். இதில் நிலைபெற்ற உள்ளத்தை உடையவனே 'ஸ்தித ப்ரஞன்' என்று கீதை சொல்லும். "ஆத்மன்யேவ ஆத்மனா துஷ்ட: 'ஸ்தித ப்ரஞ: ததோச்யதே" என்ற வரிகள் ஆத்ம ஞானத்தின் எல்லை நிலமாகப் பார்க்கப் படுகின்றன.

சமஸ்கிருத சொல்லாகிய இதற்குப் பல பொருட்களை நாம் அகராதியில் பார்க்கலாம். *Objective examination of a subject to arrive at the ultimate truth* என்பது நல்ல விளக்கம். தமிழில் சிந்தனை, ஆலோசனை, ஆராய்ச்சி போன்ற பல அர்த்தங்களைப் பார்க்கலாம்.

இந்த நோக்கில், இந்திய சித்தாந்தங்களில் விரிவாகக் காணப்படக்கூடிய ஒரு நிலைப்பாடு இது.

ஆனால் இது எல்லாவிதமான மனிதர்களுக்கும் பொருந்தக் கூடியது அல்ல. பலருக்கு ஒரு குறிப்பிட்ட வழியைப் பின்பற்றிச் செல்வது என்பது சுலபமாக இருக்கும். அவர்கள் தேடுதல் என்ற இந்த விசார மார்க்கத்தைப் பெரிதும் விரும்ப மாட்டார்கள். வெகு சிலருக்கே இதைப் பற்றிய நாட்டம் ஏற்படும். இதைத்தான் ரமண பகவான் உபதேச உந்தியாரில் வற்புறுத்துகிறார். நம் உள்ளத்திலே எழக்கூடிய அந்த 'நான்' என்பது யார் என்று தேடுவது ஞான விசாரமாகும். இதுவே ரமணரின் கருத்து. உபதேச உந்தியாரில் இதற்கு விளக்கம் கிடைக்கிறது

நான்என்று எழுமிடம் ஏதென நாடஉள்
நான்தலை சாய்ந்திடும் உந்தீபற
ஞான விசாரமிது உந்தீபற (உபதேச உந்தியார்–19)

இதைப் பற்றி மேலும் விவாதிப்பதற்கு முன்னால் என்னுடைய சொந்த அனுபவம் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் நான் காசி, கயா போன்ற க்ஷேத்திரங்களுக்குச் சென்றேன். இந்த இடங்களில் நம்முடைய முன்னோர்களுக்கு பிண்டம் கொடுப்பது என்பது தொன்றுதொட்டு இருக்கும் ஒரு வழக்கம். இந்த முறையில் புரோகிதர் சொல்லும் மந்திரங்களைச் சொல்லி, அவர் காட்டும் வழியிலே நாம் பிண்டத்தைக் கொடுப்போம். இதில் நம்முடைய சொந்த அபிப்பிராயங்களுக்கு இடமில்லை. விசாரம் என்பது (கர்ம மார்க்கத்தின் உட்கருத்தை ஆய்வு செய்யும் ஒரு சிலர் நீங்கலாக மற்றவர்களுக்கு) இங்கு எழுவதில்லை.

பின்னர் காசியில் உள்ள பல ஆலயங்களுக்குச் சென்றேன். விஸ்வநாதர், அன்னபூரணி, விசாலாட்சி போன்ற தெய்வங்களை வழிபடும் வாய்ப்புக்

*கிடைத்தது. அங்கு நம் மனம் இறைவன் பால் சென்று ஈடுபடுகிறது என்பதை உணர முடிகிறது. இதில் நாம் விசாரம் என்பதை மேற்கொள்ளாவிட்டாலும் நம்முடைய அனுபவம் என்பது நமக்கு ஒரு தேடுதலின் பூர்த்தியைச் செய்து கொடுக்கிறது.*

*அடுத்தபடியாக கங்கைக் கரையிலே ஒரு அழகிய நாவாயில் சென்றேன். நல்ல வசதியான 'ஸ்டீம் லான்ச்' போன்ற அமைப்பு. அங்கு அமர்ந்து கங்கைக் கரையில் உள்ள 84 துறைகளை (அவர்கள் (ghat) காட் என்று சொல்கிறார்கள்) கண்டு ரசித்தேன். அப்பொழுது 5000 ஆண்டுகளாக இந்தியாவில் தொடர்ந்து இருக்கும் தத்துவக் கோட்பாடுகளை எல்லாம் சிந்தித்துப் பார்க்கும் ஒரு சூழலும் வாய்ப்பும் கிடைத்தது. பிணங்கள் எரிவதைப் பார்க்கும்போது யாக்கை நிலையாமை என்று நம் முன்னோர் சொன்னது நினைவுக்கு வந்தது. எத்தனை தலைமுறைகள் இங்கு நீராடிப் பேரின்பமடைந்து இருப்பார்கள் என்ற வியப்பும் தோன்றியது.*

*இவ்வாறு ஒரே நகரத்தில், கர்மம் (பிண்டம்), பக்தி (ஆலய தரிசனம்), ஞானம் (கங்கை நதியின் மூலம் தத்துவ விசாரம்) என்னும் மூன்று மார்க்கங்களிடையே 'விசாரம்' என்பதின் பயன்பாட்டை உணரும் வாய்ப்புக் கிடைத்தது. இது உபதேச உந்தியாரில் ரமணர் காட்டும் வழியின் நீட்சியாகத் தோன்றியது.*

*இந்தச் சமயத்தில், இந்தத் தத்துவ ஆராய்ச்சியின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் பார்ப்போம்.*

*வேதங்களில் யாகங்களும் வேள்விகளும் அதிகம் காணப்படும். ஆனால், இந்தக் கர்ம காண்டத்தின் இடையே கூட, பல இடங்களில் நம் சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துகளையும் அவர்கள் சிந்தித்தனர். ருக் வேதத்தில் தத்துவத்தின் அரண்மனை வாசல்கள் திறக்கப்பட ஆரம்பித்ததைக் காண முடிகிறது. அந்த வழியிலே உபநிஷதங்கள் நம்மைக் கைபிடித்து*

ஞானப் பாதையில் அழைத்துச் செல்கின்றன. பின்னர் வந்த இதிகாச புராணங்கள் நமக்கு பக்தி நெறியைத் திகட்டத் திகட்ட அளித்தன. இதைத் தொடர்ந்து கர்மாக்களின்பால் ஈடுபாடு குறைய பக்தி மார்க்கமும் ஞான மார்க்கமும் இந்தப் புண்ணிய பூமியில் பரவத் தொடங்கின.

இந்தக் கட்டத்தில் தான் விசாரம் என்பதன் தேவை பலராலும் உணரப்பட்டது.

ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட ஆன்மிகப் படிக்கட்டில் இருக்கிறோம். சிலருக்கு கர்ம மார்க்கம் உகந்ததாக இருக்கிறது. வேறு சிலர் பக்தியில் ஈடுபட்டு தங்களை மறக்கிறார்கள். மற்றவர்களுக்கு வேதாந்த சிந்தனைகள் பெரிய தூண்டுகோலாக அமைகின்றன. ஆகவே அந்தந்த நிலையில் அவரவர்கள் படிப்பு, அறிவு, அனுபவம், பின்புலம் இவற்றின் காரணமாகத் தங்களுக்கேற்ற பாதையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இதற்கு மிக முக்கிய காரணமாக அமைவது அவர்கள் பெற்ற கல்வி அறிவு. நல்ல குருவை அடைந்து சிறந்த முறையிலே பயிற்சி பெற்றவர்களுக்கு ஞான மார்க்கம் சுலபமாகக் கிட்டும். அதே சமயத்தில் இத்தகைய வாய்ப்பினைப் பெறாத ரமணர், நம்மாழ்வார் போன்ற சில மகான்களுக்கும் இந்த மார்க்கத்திலே ஈடுபாடு சுயமாகவே ஏற்படுகிறது.

நம்முடைய வேதாந்த நூல்களில் கற்பித்தல் என்பது ஒரு முக்கியமான அம்சமாக ஒருவனுடைய வாழ்க்கையில் பார்க்கப்படுகிறது. அதற்கு அவன் சிறு வயது முதலிலேயே தயாராகிறான். முதலில் ஒரு ஆசானை அணுகுகிறான். அவர் அவனுக்கு ஆரம்பக் கல்வியை போதிக்கிறார். அவருக்கு அத்தியாபகர் என்று பெயர். அடுத்த நிலையிலே அவனுக்குப் படிப்பின் பயனாகக் கிடைக்கும் அறிவு தேவைப்படுகிறது. அந்த நிலையில் அவன் உபாத்தியாயர் என்பவரைத்

தேடுகிறான். அவர் அவனுக்கு மேலான அறிவைப் புகட்டுகிறார்.

அடுத்ததாக வாழ்க்கைக்குத் தேவையான திறன்கள் பற்றிய அறிவைப் பார்ப்போம். இதற்கு அந்தந்தத் துறையில் சிறந்த ஆசாரியன் என்பவனை அவர்கள் அணுகுகிறார்கள். இவ்வாறு தான் வில் வித்தையில் துரோணாச்சாரியார் சிறந்தவராக விளங்கினார்.

இந்த மூன்று நிலைகளிலும், தெளிவான குரு சிஷ்ய உறவு பார்க்கப்படுகிறது. பின்னர், வாழ்க்கையில் மேலும் ஞானம் பெற சிலர் அறிஞர்களை அணுகி அவர்களுடைய உபன்யாசங்களைக் கேட்டும் நூல்களைப் படித்தும் சிறந்த அறிவினைப் பெற இயலும். இது நேருக்கு நேராக பிரத்தியேகமாக செய்யப்படக்கூடிய ஒரு கல்விப் புகட்டல் அன்று. இவ்வாறு ஞானத்தைப் பரப்புபவர் பண்டிதர் என்று போற்றப்படுகிறார்.

அடுத்த நிலையிலே நாம் இவர்களை எல்லாம் விட ஒரு தலைசிறந்த ஞானியைப் பார்க்கிறோம். அவர் வெறும் அறிவு புகட்டுவதோடு நின்று விடவில்லை. நமக்கு ஆன்மீகப் பொலிவையும் தந்து அருள் புரிகிறார். அவரே குரு எனப்படுகிறார். இவர் ஞானத்திலே பெரியவராக விளங்குவதால் குரு என்று அழைக்கப்படுகிறார்.

இந்தச் சொற்கள் எல்லாச் சம்பிரதாயங்களிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரி பொருள் கொள்ளப்படவில்லை. உதாரணமாக ஆசாரியன் என்ற கருத்து வைணவ சம்பிரதாயத்தில் வேறு விதமாக பேசப்படுகிறது. இதில் ஆசாரியன் இறைவனுக்கு சமமாகப் பார்க்கப்படுகிறான். நம்மை இறைவனிடம் அழைத்துச் செல்பவனே ஆசாரியன். இதே போல குரு என்ற சொல்லும் வழக்கத்தில் எல்லாவித ஆசிரியர்களையும் குறிக்கும்.

எப்படி இருப்பினும், ஆசாரியார், உபாத்தியாயர், பண்டிதர், குரு என்னும் இந்த எல்லாச் சொற்களுமே நமக்கு அறிவு என்ற பொக்கிஷத்தை வாரி வழங்குகின்ற ஒரு ஆசானையே குறிப்பிடக் கூடியவை என்பதில் ஐயமில்லை.

மனு தன்னுடைய நூலில் எவ்வாறு குருவினிடத்திலே வணக்கத்துடன் கல்வியைக் கற்க வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குகிறார். இவ்வாறு கற்ற கல்வி வாழ்நாள் முழுவதும் அவனுக்குத் துணை நிற்கிறது. இந்த கற்கும் காலத்தில் அவனுக்குப் பல நியம நிஷ்டைகள் விதிக்கப்பட்டுள்ளன. போற்றுதலைப் புறந்தள்ளி, அவமானத்தை அமிர்தமாகக் கருதி, யாரிடமும் பகை பாராட்டாமல் வாழவேண்டும். (மனு நீதி — 2.162,163). சுவையான உணவைப் புசிக்கலாகாது; வாசனைப் பூச்சுகள் அலங்காரம் போன்றவற்றை ஒதுக்க வேண்டும்; பெண்கள் சகவாசம் முற்றிலும் கூடாது. (மனு நீதி 2.177) அவ்வாறு மனதை எள்ளளவும் உலகியல் விஷயங்களில் செலுத்தாமல் கல்வியைக் கற்றுத் திரும்பும் அந்த மாணவனிடத்திலே பிரம்ம தேஜஸ் கண்கூடாக இருக்கும் என்பது நம் முன்னோர்கள் அனுபவம்.

இந்தக் கற்றல் என்னும் நிலையில், குருவானவர் தன் சிஷ்யனை தன் உதரத்தில் மூன்று இரவுகள் (தாய், சிசுவைத் தாங்கி நிற்பது போன்று) தாங்குகிறார் என்கிறது அதர்வண வேதம் (அத். 11. 5.3). குரு ஒரு தாயாக இருந்தார் என்பதை இது உணர்த்துகிறது. இந்த உறவில் வியாபார பேரங்கள் இன்றி அறிவுத் தாகமே மேலெழுந்து காண்கிறது.

பணத்தைக் கொடுத்து விட்டு பிறகு கல்வி கற்கும் இந்த நாட்களில், இந்த ஆசிரியருக்கு உரிய மதிப்பு குறைந்து போனதில் வியப்பு இல்லை. ஆனால் மனுதர்மத்தில் குறிப்பிட்டது போல, அந்தக் காலத்தில்

*மாணவன் ஆசிரியனுக்கு எந்தப் பொருளையும் சம்பளமாகக் கொடுப்பதில்லை. குருகுலத்தில் அவன் பல ஆண்டுகள் தங்கி இருந்து கல்வியைக் கற்றுத் திரும்பிச் செல்கையில், ஆசிரியர் விருப்பப்பட்டால் குருதட்சணை என்று குறிப்பிட்டு எதையாவது கேட்கலாம். அதைக் கொடுப்பது சிஷ்யனின் கடமை. (மனு நீதி– 2.245). இந்த முறையில் கற்ற மாணவர்கள் ஞான விசாரத்தில் நாட்டம் கொண்டவராக விளங்கியது இயற்கையே!*

*இந்த விசாரம் அத்தனை சுலபமில்லை. இதற்குப் பல எதிர் சக்திகள் நம்மை மாற்றுப் பாதையில் தள்ளக் காத்து நிற்கின்றன. புற எதிரிகளைக் கூடப் போராடி சமாளித்து விடலாம். ஆனால் நமக்குள்ளேயே சில எதிரிகள் இருக்கிறார்களே, அதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? ரமணர் இதை ஐம்புலக் கள்வர்கள் என்று குறிப்பிடுவார்.*

*ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது*
*அகத்தில்நீ இலையோ அருணாசலா!!!*

*(அக்ஷரமணமாலை, 11)*

*நம்மை இழுக்கும் புலன்கள்தான் அவை. அருணாசலம் என்னும் அற்புத ஜோதி நம்முள் இருக்கையில், நம் அகம் பிரகாசமாக இருக்கிறது. ஒளி நிறைந்த இடத்திற்குள் கள்ளர்கள் வரமாட்டார்கள். ஆகையினால் ஆத்ம விசார ஜோதி இருக்கும்வரை புலன்களின் ஐம்பம் சாயாது. ஆனால் அது இல்லாமல் நம் அகம் இருண்டு போகும் சமயம் பார்த்து இந்தப் பேராசை பிடித்த புலன்கள் தம் வழி நம்மை இழுத்துச் செல்ல, நாம் அமைதி என்னும் பெரும் செல்வத்தை இழக்கிறோம். இழந்ததைப் பெறுவது அவ்வளவு சுலபமில்லை. இந்தத் திருடர்களிடம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதனால்தான் நம் மந்திரங்களில் முடிவில் ஓம் சாந்தி: என்பதை மும்முறை*

*சொல்லி நமக்கு ஞானவிசாரத்தை நம் முன்னோர்கள் நினைவு படுத்துகிறார்கள் போலும்!!*

*இந்த விசாரத்தில் ஆன்மிகத்துக்கு மட்டுமல்ல, லௌகிகத்துக்கும் இடமுண்டு. இதற்குச் சிறந்த உதாரணம் ஞான விசாரத்தின் தலைசிறந்த சாரமான கீதையை உபதேசித்த கண்ணன்தான். அவன் சாரதி என்ற முறையில் குதிரைகளை வழி நடத்த சாட்டையை ஒரு கையிலும், பரமன் என்ற முறையில் அடியார்களை வழி நடத்த ஞானமுத்திரையை மறு கையிலும் ஏந்தி நிற்கிறானாம்.*

*ப்ரபன்ன பாரிஜாதாய தோத்ர வேத்ரைக பாணயே ।*
*ஞான முத்[3]ராய க்ருஷ்ணாய கீ[3]தாம்ருத து[3]ஹே நம: ॥*

***உன்னதத் தத்துவம்:***

*விசாரத்தை எப்படி நடத்த வேண்டும் என்னும் வழிமுறையை ருக் வேதத்தில் வரும் ஒரு மந்திரம் சொல்லும். ஒன்றாக சபைக்குச் செல்லுங்கள்; ஒன்றாக இணைந்து பேசுங்கள். உங்கள் எண்ணமும் பேச்சும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் இருக்கட்டும். ஒருவருக்கொருவர் நன்றாகப் புரிந்துகொண்டு கருத்து தெரிவியுங்கள். அனைத்தையும் கேட்டுப் பின்னர் ஒன்று பட்ட முடிவை எடுங்கள் (ருக் 10.191). இந்த முறையில் வேதாந்த விசாரங்கள் நடைபெற்றன. அதனால், சுயவிளம்பரம் இல்லாமல் ஞானத்தைப் பெறுவதையே முடிவாகக் கொண்டு அவர்களின் சம்பாஷணைகள் நடைபெற்றன. ஆழ்ந்த கற்றல் முறையில் பெற்ற நல்ல அறிவும், விசாலமான மனப்பாங்கும், சபைகளில் பரிமளித்தன. ஜனகரின் சபையில் யாஞ்யவல்கருக்கும் மற்றையோருக்கும் நடந்த சம்வாதங்கள் புகழ் பெற்றவை. பிருகதாரணிய உபநிஷதத்தில் பல இடங்களில் இதைப் பார்க்கலாம். இதே போல சங்கர–மண்டனமிஸ்ர விவாதம் அனைவரும் அறிந்தது. இந்த விசாரங்கள் மூலமாக நமக்கு அற்புதமான சித்தாந்த*

*நல்முத்துகள் கிடைத்தன. இத்னால்தான் இந்த நாட்டை ஞான பூமி என்கிறோம். தனிமனித அடையாளங்கள் ஒழிந்த நிலையில் நிரந்தர ஞானத்தை அவர்கள் நமக்கு அளித்தார்கள். இதன் பின்னணியில் சிறந்த கற்றல் என்னும் ஏற்பாடு இருந்தது.*

*இது வெறும் ஏட்டுச்சுரைக்காய்க் கல்வி அல்ல. ஆசாரியன் சிறந்த கல்வி ஞானத்தை உடையவன் மட்டுமல்ல, அவன் அதில் கூறப்பட்டுள்ள நன்னெறிகளை முற்றும் பின்பற்றுபவனாக இருத்தல் அவசியம்; அத்துடன் தன் சிஷ்யர்களையும் அதில் நிலைநிறுத்துபவனாக இருக்க வேண்டும். தர்ம சாஸ்திரங்களில் இது பெரிதளவில் வற்புறுத்தப் படுகிறது. (ஸ்வயம் ஆசரதி; ஆசாரே ஸ்தாபயதி).*

*அதனால்தான், ஞான விசாரம் வெறும் அறிவு சம்பந்தப்பட்ட ஒன்றாக மட்டுமல்லாமல், உயர்ந்த வாழ்வு நெறிகளையும் நமக்குக் காட்டுகிறது. தைத்திரிய உபநிஷத்தில் இது விளக்கப்படுகிறது. தர்மத்தைப் பின்பற்று; சத்தியத்தைப் பேசு; குடும்ப விருத்தியை கருத்தில் கொள்; கற்றலை விடாதே; மற்றவருக்கும் அதைப் புகட்டு — போன்ற பல நன்னெறிகளைக் காண்கிறோம். உயர்ந்த நடத்தையே அறிஞனின் விலாசமாகிறது. இதைத்தான் பின்னாளில் எமர்சன் என்னும் அறிஞன் சொன்னான், 'உன் செயல்களே உன்னைப் பற்றி முழுமையாகப் பேசுகின்றனவே, அந்த ஒலியில், நீ சொல்வது எதுவும் என் காதில் விழவில்லை.'*

*(What You Do Speaks So Loudly I Cannot Hear What You Are Saying —— R.W. Emerson).*

*முடிவாக, விசாரம் என்பது ஒரு வேதாந்த முறைமட்டுமல்லாது, சமுதாய வாழ்வின் கலங்கரை விளக்கமாகவும் அமைந்து, பாரத வர்ஷத்தின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணமானது.*

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹறன்

### *22. அங்கியில் பஞ்சு*

*குறள் 211: அங்கியில் பஞ்சுபோல் ஆகாயத் தேநினையில்
சங்கிக்க வேண்டாம் சிவம்.*

*பொருள்: இந்தக் குறளுக்கு இருவிதமாய்ப் பொருள் கொள்ளலாம்.*

*சிதாகாசம் ஆகிய பரவெளியில் வேறு ஒரு நினைப்பும் இன்றி, பரமாத்விலேயே தியானித்தால், அனல் பட்டவுடன் பஞ்சு தீப்பற்றி சோதி வெளிப்படுவதுபோல சிவம் பரஞ்சோதியாய் வெளிப்படும். அதில் ஐயம் ஏதும் கொள்ள வேண்டாம்.*

*(அல்லது)*

*பராகாசத்தில் பரமாத்மாவையே நினைத்து இருந்தால், தீப்பொறி பட்ட பஞ்சு உடனே பற்றி எரிந்து கலப்பதுபோல், ஜீவபோதம் அழிந்து, சிவபோதம் மீதுறும். இதில் ஐயம் கொள்ள வேண்டாம்.*

*குறள் 212: மெய்ப்பால் அறியாத மூடர்த நெஞ்சத்தின்
அப்பால தாகும் சிவம்.*

*பொருள்: 'ஸ்பந்தனம்' என்று இதயத்துள் எப்போதும் அதிர்ந்து கொண்டு இருக்கும் மெய்ம்மையை உணராது உலகிலேயே மூழ்கி இருப்பவர் மனத்தை விட்டு சிவம் நீங்கிவிடும். வெறும் மடமையே குடி இருக்கும்.*

*குறள் 213:* நெஞ்சகத்து நோக்கி நினைப்பவர்க்கு அல்லாஅல்
அஞ்சலென் னாது சிவம்.

*பொருள்:* வெளியே செல்லும் மனத்தை உள்நோக்கித் திருப்பி, பரமாத்மாவையே இதய கமலத்தே சதா நிறுத்தி தியானிப்பவர்க்கு அன்றி ஏனையோர்க்கு துயர் வரும் சமயம் சிவம் வந்து 'அஞ்சாதே!' எனக் காத்து அருளாது

இதயமாம் குகையின் நாப்பன் ஏகமாம் பிரம்ம மாத்ரம்
அதுஅகம் அகமா நேரே அவிர்ந்திடும் ஆன்மா வாக
இதயமே சார்வாய்

என்பது பகவானின் வழிகாட்டல்.

*குறள் 214:* பற்றிலாது ஒன்றினைப் பற்றினால் அல்லது
கற்றதனால் என்ன பயன்.

*பொருள்:* பரம்பொருளின் மீது இடைவிடாது கருத்தைச் செலுத்தினால் அன்றி பல்வேறு சாத்திரங்களையும் நூல்களையும் கற்பதனால் பயன் ஏதும் இயல் அது வெறும் ஏட்டுப் படிப்பே.

**விளக்கம்:**

தன்னை அறியாது பிற தத்துவங்கள் அத்தனையும்
சொன்ன நூற்கோடி தொகை போயின் ஏது பயன்?

என்று வெறும் நூற்கல்வியின் பயனற்ற தன்மையை விளக்கும் முருகனார்,

என்னை அறிவித்து எனை ஆண்ட வேங்கடன்தாள்
வன்ன மலர்க்கே வரைந்தூதாய் கோத்தும்பி

என்று திருக்கோத்தும்பியில் கூறுகிறார்.

"நூலறிவையும் மாலறிவையும் நீக்கி எனக்கு 'வாலறிவு' என்றும் இறைஞானத்தை அருள்வாய்" என்று ரமண நாயகி அருணாசலனிடம் வேண்டுகிறாள்.

நாயமாத்மா பலஹீனேன லப்ய:
நமேதயா ந பஹுதா ஸ்ருதேன

இதே கருத்தை வள்ளுவர் பெருமானும் கூறுகிறார்:

*கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்.*

*குறள் 215: தம்மை யறிவாரைத் தாமறிந்து கொண்டபின்*
*தம்மை யறிவரோ தான்.*

*பொருள்:* "தன்னை அறிந்தால் தலைவனைக் காணலாம். தலைவனை அறிந்தபின் 'தன்னை' அறிவதற்கு என்று எதுவும் இல்லை.

*விளக்கம்:* ஔவைப் பிராட்டியின் இந்தக் கருத்தை பகவான் ஆணித்தரமாக 'உள்ளது நாற்பது' 13ஆவது பாடலில் எடுத்துரைக்கிறார்:

ஞானமாம் தானேமெய் நானாவாம் ஞானம்அஞ்
ஞானமாம் பொய்யாம்அஞ் ஞானமுமே — ஞானமாம்
*தன்னைஅன்றி இன்றுஅணிகள் தாம் பலவும் பொய்மெய்யாம்*
பொன்னைஅன்றி உண்டோ புகல்

உலக ஞானம், அஞ்ஞானம் எல்லாம் ஒன்றுதான் என உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆத்மா ஒன்றே மெய்ப்பொருள். நானாவிதமாக பல்வேறு தோற்றங்களை அறிய வைக்கும் அறிவும் பொய்யாகிய அஞ்ஞானமும் ஞானமும் ஆகும். உண்மையில் பொய்யாகத் தோன்றும் அந்த அஞ்ஞானமும் ஞான ஸ்வரூபமான ஆத்மாவை அன்றி வேறாக இல்லை. பலவிதமான நாம ரூபங்களுடன் கூடிய அணிகலன்கள் பொய்யான வெளித் தோற்றங்கள். அவை மெய்ம்மையாகிய பொன்னை விட்டு வேறாக இல்லை என்கிறார் பகவான்.

திருமந்திரமும் இதே கருத்தைக் கூறுகிறது:

*மரத்தை மறைத்தது மாமத யானை*
*மரத்தில் மறைந்தது மாமத யானை*
*பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்*
*பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்.*

*குறள் 216: அசபை அறிந்துள்ளே அழல்எழ நோக்கில்*
*இசையாது மண்ணிற் பிறப்பு.*

*பொருள்: மந்திர உச்சாடனத்திலேயே சிறந்தது 'அஜபா' அல்லது 'அசபை' என்னும் ஒற்றை எழுத்து (ஓங்காரம்) எழுத்து மந்திரத்தை வெளியே உச்சரிக்காமல் இதயத்தே வைத்து மூச்சுக் காற்றோடு கலந்து எப்போதும் ஜபிப்பதே ஆகும்.*

*விளக்கம்: திருமந்திரம் 884ஆவது பாடலில் திருமூலர் இதை விளக்குகிறார். இந்த அஜபா மந்திரத்தை இடைவிடாது ஜபித்தால் பிறப்பு-இறப்பு என்னும் சங்கிலி அறும்.*

*அசபை மந்திர யோகத்தினை திருமந்திரம் 884ஆவது பாடலில் திருமூலர் கூறுகிறார்:*

*போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தைத்*
*தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி*
*சாற்றுகின்றேன் அறைஓர் சிவயோகத்தை*
*ஏற்றுகின்றேன் எம்பிரான் ஓர் எழுத்தே.*

---

**ரமணோதயம்**
**Voluntary Services**

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770
ராஜேஷ் M.S. 9840075778

# இடையறாப் பேச்சு

**D. தியாகராஜன்**

தொலைத்தொடர்பு வளர்ச்சியுற்றதன் பிறகு சிறு குழந்தைகள் முதல் முதியோர்கள்வரை அனைவரும் ஏதோவொரு காரணத்திற்காக நாள்முழுவதும் கைபேசியில் இடைவிடாது பேசிக் கொண்டேயிருக்கின்றார்கள். இந்த சாதனம் தற்காலத்தில் பல காரணங்களுக்காக அவசியத் தேவையாய் மாறிவிட்டிருந்தாலும் இதன் அதிக பயன்பாட்டினால் தேவையில்லாமல் பல உடல் மற்றும் மனநல சிக்கல்களையும் உருவாக்குகின்றது. இந்த இடைவிடாத பேச்சையும் சாதகர்களுக்கு பகவான் ரமணர் வலியுறுத்திய இடையறாப் பேச்சு என்னவென்பதையும் இங்குக் காண்போம்.

'நுணலும் தன் வாயால் கெடும்' – நுணல் (தவளை) மழைநீரைக் கண்ட சந்தோஷத்தில் சப்தம் எழுப்பும். இரையைத் தேடும் பாம்புக்கு அது ஏதுவாக அமைந்து, பாம்புக்கு அந்தத் தவளை இரையாகும். தேவை இல்லாத அனாவசிய பேச்சுக்கள் பேசுவோர் அந்த வாயாலே கெடுவர் என்பதே இதன் கருத்து.

சுபாவத்தில் சோம்பேறியான குயில், தனது முட்டைகளை காக்கையின் கூட்டில் வைத்து விடும். வேறுபாடு அறியாத காகமும் அனைத்து முட்டைகளும் அடைகாத்து குஞ்சுபொறிக்கும். நிற வேறுபாடு இன்மையால் அனைத்துக் குஞ்சு பறவைகளையும் பாதுகாத்து உணவளித்து பராமரித்து வரும். சில நாட்களுக்குப் பிறகு குயில் குஞ்சுகள் சப்தம் எழுப்ப ஆரம்பிக்கும்போது, இது தனது இனம் அல்ல என்றறிந்த காகம் அந்தக் குயில் குஞ்சுகளை வெளியில் துரத்தி விடும்.

*இந்த உதாரணங்களின் வாயிலாக தேவையற்ற பேச்சின் தீமைகளையும் மௌனத்தின் பயனையும் நாம் யாவரும் நன்று அறியலாம். இருப்பினும் தகவல் பரிமாற்றம், அவசிய அவசரத் தேவைக்கான கண்டுபிடிப்பான செல்லிடப் பேசி, நம் அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்த ஒன்றாகிப் போனது. அத்தியாவசியத் தேவையைத் தாண்டி, நாம் யாவரும் தற்போது அதிகம் கைபேசியைப் பயன்படுத்தி, தேவையற்ற வீண் பேச்சுக்கள், அரட்டைகள் என நம் அனைவரின் நேரத்தையும் வீணடித்துக் கொள்கிறோம். இந்தத் தொழில்நுட்பம் அனைவரையும் படிப்படியாக ஆக்ரமித்து அடிமைப்படுத்தியுள்ளது.*

*கடவுள் வழிபாட்டிலும்கூட மானசீக மௌன ஜபத்தை வலியுறுத்தி கீழ்க்கண்ட பாடலை பகவான் ரமண மகரிஷிகள் அருளியுள்ளார்கள்.*

*வழூத்தலில் வாக்குச்ச வாய்க்குட் செபத்தில்*
*விழுப்பமா மானத முந்தீபற*
*விளம்புந் தியானமி துந்தீபற. (உபதேச உந்தியார் 6)*

*உரத்த குரலில் துதித்து வழிபடுவதைவிட, வாய்க்குள்ளேயே ஜபம் செய்வது சிறந்ததாகும். மானசீகமாக ஜபிப்பது அதைவிடச் சிரேஷ்டமானது. இதுவே தியானம் என்றும் சொல்லப்படும் என்பது இதன் பொருளாகும்.*

*ஆனால் உண்மையில் மௌனம் என்பது மனத்தின் மௌனமேயாகும். கணினி, தொலைக்காட்சி மற்றும் செல்லிடப்பேசி பயன்படுத்துவோர் இந்த மின்னணு சாதனத்தை பயன்படுத்தும்போது — பணி நிமித்தமாகவோ அல்லது பொழுதுபோக்கிற்காகவோ – மணிக்கணக்கில் அதில் மூழ்கி பேசாமல் இருக்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் பல மணிநேரங்கள் பேசாது இருந்தாலும் அவர்கள் மனம் பணியைப் பற்றியோ, பொழுதுபோக்கின் காரணமாக*

கிளர்ச்சி அடைந்தோ, மனம் இயங்கிக் கொண்டேதான் இருக்கின்றது. வெறுமனே பேசாதிருத்தல் மௌனம் அன்று. மனம் அடங்கியிருத்தலே நிஜ மௌனமாகும்.

வாக்கும் மனமும் இரண்டும் மவுனம்ஆம்;
வாக்கு மவுனத்து வந்தாலும் மூங்கையாம்;
வாக்கும் மனமும் மவுனமாம் சுத்தமே
ஆக்கும்அச் சுத்தத்தை; யார்அறி வார்களே.

– திருமந்திரம்

வாக்கு, மனம் ஆகிய இவ்விரண்டும் சும்மா இருத்தலே 'மௌனம்' என்பதாகும். 'அஃதன்றி மனம் எவ்வாறு செயற்பட்டாலும் வாக்கு மட்டும் செயற்படாது வாளா இருத்தல்தான் மௌனம்' எனக் கூறினால் உலகில் ஊமைகளாய் உள்ளார் யாவரும் மௌனிகளாவிடுவர். வாக்கு, மனம் – இவ்விரண்டும் அடங்கிய தூய நிலையே 'சுத்த நிலை' எனப் படுகின்ற அந்த வீடுபேற்றைத் தரும். என்பதை இந்த திருமந்திரப் பாடல் தெளிவுற விளக்குகிறது.

பேச்சற்ற நிலையில் தோன்றும் ஆன்மாதான் சுயம்பிரகாச ஒளி. இதனைக் கீழ்க்கண்ட சம்பாஷணையின் வாயிலாகக் காண்போம்.

ஒரு சமயம் யாக்ஞவல்கியர் என்ற ரிஷி ஜனகருடைய சபைக்குச் சென்றபொழுது அரசன் அவரை, 'மனிதனுக்கு எது ஒளியாக இருக்கிறது?' என்று கேட்டான்.

யாக்ஞவல்கியர்: சூரியனே மனிதனுக்கு ஒளியாகத் திகழ்கின்றான். பகலில். இந்த சூரிய ஒளியின் மூலம்தான் நாம் நம்முடைய கடமைகளைச் செய்கிறோம்.

அரசன்: சூரியன் அஸ்தமித்த பிறகு மனிதனுக்கு ஒளியாக அமைவது எது?

முனிவர்: நிலா. நிலவு வெளிச்சத்தினால் சூரியன் அஸ்தமித்த பிறகு நம்முடைய வேலைகளைச் செய்கிறோம்.

அரசன்: நிலா இல்லாதபோது எது நமக்கு ஒளியாகத் திகழ்கின்றது?

முனிவர்: நெருப்பு. நெருப்பினால் விளக்கை ஏற்றி, அந்த விளக்கின் ஒளியைக் கொண்டு காரியங்களைச் செய்யலாம்.

அரசன்: அந்த நெருப்பும் அணைந்தபிறகு சூரியனும் இல்லை, சந்திரனும் இல்லை, நெருப்பும் இல்லை. பிறகென்ன?

முனிவர்: இந்த நிலையில் பேச்சு மூலம் நம்மைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். உதாரணமாக இருளில் செல்லும்பொழுது நம்முடைய கைகளைத் தட்டுகிறோம். அல்லது உரக்கப் பேசி நம் பின்னால் வருபவர்களுக்கு நாம் இருப்பதைக் கூறுகிறோம்.

அரசன்: அந்த நிலையில் பேச்சுகூட இல்லையென்றால் எது மனிதனுக்கு ஒளியாக இருக்கின்றது.

முனிவரின் இறுதி பதில்: ஆன்மா! ஆன்மாதான் சுயம்பிரகாச ஒளி.

நாம் கனவு காணும் போது என்ன நடக்கிறது? அங்கே சூரியனில்லை. சந்திரனில்லை. நெருப்பில்லை. பேச்சுக்கூட இல்லை. ஆனால் அங்கே உணர்வு இருக்கிறது. எனவே ஒளி இல்லாவிட்டாலும் அங்கே உணர்வு இருக்கிறது. அனுபவம் இருக்கிறது. எனவே இந்த ஆன்மாவே இதயத்தின் பின்னாலிருந்து எல்லாவற்றையும் ஒளிர்விக்கின்றது.

நம் மனத்தை நம்பினால் நாம் ஏமாற்றப் படுவோம். ஆன்மாவை நம்பினால்தான் நாம் கடைத்தேறுவோம் என்பதுதான் பகவானின் மிகப்பெரிய உபதேசம்.

சிறு வயதிலேயே இறைவனைக் கண்டவர்களான ஞானசம்பந்தர், பகவான் ரமண மகரிஷிகள், அருணகிரிநாதர், மாணிக்கவாசகர் போன்ற எண்ணற்ற ஞானிகள் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று இப்பேருண்மையை மக்களுக்கு எடுத்தியம்புகின்றனர்.

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே

வள்ளியின் நாயகனே, உனது பெருங் கருணையின் காரணமாக ஏற்பட்ட திருவருளால் ஆசை என்கிற தொடர் சங்கிலி போன்ற பெருந் தடைகள் தூள் தூளாக உடைந்து போயின. நான் மோன நிலையை அடைந்துவிட்டேன் என அருணகிரிநாதர் 'பேசா அநுபூதி பிறந்ததுவே' என்றும் 'சும்மா இரு சொல் அற' என்றும் கந்தர் அநுபூதியில் பாடுகிறார்.

கடவுளைக் கண்டவர்கள் சும்மா இருப்பார்கள். சும்மாவிருத்தல் என்பது வேலையேதும் செய்யாமல் சும்மாவிருத்தல் ஆகாது. மௌனநிலையை அடைந்து சொல்லற்று இறைவனிடம் ஒன்றிப் போய்விடுவார்கள். இதுதான் பேசா அநுபூதி நிலையாகும்.

'சும்மா இருந்து சுகம் காண்' என்பது முதுமொழி. இதன் பொருள்: எதையும் எண்ணாமல், சிந்திக்காமல் மனம் அடங்கியிருத்தல் ஆகும். சம்ஸ்கிருதத்தில் 'ஸ்வம்' எனும் வார்த்தைக்கு மனம் மடங்கி 'தான் தானாய்' இருத்தல் என்பதாம். சும்மாயிரு என்பது

இதைத்தான் குறிக்கின்றது. மோனம் என்பது ஞானவரம்பு. செயலற்றுப் பேச்சுமற்று அந்நிலையே சும்மா இருக்கின்ற நிலை எனப்படும்.

சும்மா இருப்பதற்கு நீ ஓர் உபாயம் அருளுதல் கூடாதா என்று இறைவனை தாயுமானவர் வினவுவார். இந்த ஞான நிட்டையின் இயல்பினை தாயுமானவர் 'சின்மயானந்த குரு' எனும் தொகுப்பில் அருளியுள்ளார். மேலும் அவரது கீழ்க்கண்ட பல பாடல்களின் வாயிலாகவும் அறியலாம்.

*எம்மால் அறிவதுஅற எம்பெருமான் யாதம்இன்றிச்*
*சும்மா இருக்கஒரு சூத்திரம்தான் இல்லையோ*
*– (இல்லையோ என்கண்ணி 3)*

*சும்மா இருக்கச் சுகம் உதயம் ஆகுமே*
*– (உடல் பொய் உறவு 52)*

*சும்மா இருக்கச் சுகம்சுகம் என்று சுருதி எல்லாம்*
*அம்மா நிரந்தரம் சொல்லவும் – (பாயப்புலி 36)*

*சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே*
*அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே – (பரா.5)*

*சொன்ன ஒரு சொல்லால் சுகமா இருமனமே*
*இன்ன மயக்கம்உனக்கு ஏன்? – (உடல் பொய் உறவு 70)*

*வாய்பேசா வூமையென வைக்கவென்றோ நீமவுனத்*
*தாயாக வந்தருளைத் தந்தாய் பராபரமே.*

பேச்சு இல்லை என்றால் அங்கே ஆன்மா ஒளிரும் என்பது இங்கே வெறும் பேசாமல் மௌன விரதம் இருத்தல் என்பது பொருளாகாது. பகவான் ரமண மகரிஷிகளின் வாய்மொழி நூலில், உண்மையில் மௌனம் என்பது தென்ன? என்ற அன்பரின் கேள்விக்கு இவ்வாறு விடை பகல்கிறார்:

மனவாக்கு கடந்த நிலையே மௌனம்; அது மனத்தின் செயலின்றி நடைபெறும் தியானம். மனத்தை யடக்குவதே தியானம். ஆழ்ந்த தியானமே நிரந்தரப் பேச்சு. மௌனம் என்றால் எப்பொழுதும் பேசிக் கொண்டிருத்தல். அது வாக்கின் இடைவிடாப் பெருக்கு. அது பேச்சால் தடையுறும். வார்த்தைகள் இந்த மௌன பாஷையைத் தடுக்கின்றன.

உபந்நியாசங்கள் ஜனங்களுக்கு யாதொரு நலனின்றியே மணிக்கணக்காய் நடைபெறலாம். ஆனால், மௌனம் சாசுவதமாயும் மனித வர்க்கம் முழுவதற்கும் பலனளிப்ப தாயும் இருக்கிறது. மௌனத்தாற் சொல்லின் பயன் வன்மையாக வெளியிடப் படுகிறது. சொற் பிரசங்கங்கள் மௌனத்தைப்போல் அவ்வளவு தெளிவா யிரா. மௌன மென்றால் ஓயாமற் கோஷிப்பது. அதுதான் மிகச் சிறந்த பாஷை. சொற்கள் அடங்கி மௌனம் விளங்கும் ஓர் நிலை யுண்டு.

அப்படியானால் நம் எண்ணங்களை ஒருவர்க் கொருவர் எப்படி அறிவித்துக் கொள்ள முடியும்? என்ற அன்பர் மீண்டும் வினவினார். அதற்கு மகரிஷிகள், இருமை இருந்தா லல்லவோ அது அவசியம்! என்கிறார்.

மேலும், பேச்சு எப்படிப் பிறக்கிறது? சுத்த அறிவிலிருந்து அகந்தையும், அகந்தையினின்று எண்ணமும், அதனின்று வார்த்தைகளும் உண்டாகின்றன. ஆகையால், பேச்சென்பது ஆதிமூலத்தின் கொள்ளுப்பேரன். பேச்சால் பயனுண்டாகு மானால் மௌனத்தாற் பிரஸங்கிப்பது எவ்வளவு மேலான சக்தியுள்ளதா யிருக்கவேண்டு மென்பதை நீயே நினைத்துப் பார் என்கிறார்.

இடைவிடாத தியானத்தினால் ஒருவர் தனது ஆத்ம ஸ்வரூபத்தை அடையலாமென்று பகவான் கூறுகிறார்.

ஒருபுறம் அலுவலகப் பொறுப்பும், வேலைப் பளுவும், மறுபுறம் குடும்பப் பிரச்சனைகளைச் சமாளிக்கும் பாரமும் வாழ்வின் பெரும் பகுதி இதிலேயே செலவிடப்படுகிறதினால் ஆத்ம விசாரத்திற்கு நேரம் ஏது? அதுவும் இடைவிடாது தியானிப்பதென்பது மிகக் கடினம். குடும்பஸ்தர்களுக்கு இது எவ்வாறு சாத்தியமாகும்? இதற்கு பகவானே ஒரு வழி கூறி அருள் புரிய வேண்டும். என்று சிரத்தையுள்ள அன்பர் ஒருவர் பகவானை வினயத்துடன் கேட்டார்.

இதனைக் கேட்ட பகவான் மிக்க கருணையுடன் மெதுவான குரலில் அவரைப் பார்த்து, நீங்கள் வீட்டை விட்டு ஆச்ரமம் வருவதற்காகப் புறப்படுகிறீர்கள்! வழியில் உமது நண்பரைச் சந்திக்கிறீர்கள். அவருடன் க்ஷேமலாபங்கள் விசாரித்து முடிந்தபின் அவரிடம் விடைபெற்று ஆச்ரமம்தானே வருகின்றீர்கள்? நண்பருடன் செல்வதில்லையே? ஏன்! ஆச்ரமம் செல்ல வேண்டுமென்ற எண்ணம் ஆழப்படிந்துள்ளது. அதைப் போன்றே காலையில் எழுந்தவுடன் மனம் அமைதியாக இருக்கும். முடிந்தவரை அப்போது மனதை தியானத்தில் ஈடுபடச் செய்தால் வேலை செய்யும் போதும் அதன் தொடர்பு இருக்கும். குடும்ப பொறுப்புகள், வேலை பொறுப்புகள் இல்லாத நேரத்தில் மனதை தியானத்தில் பழக்கினால் வேலை செய்யும் போதும் அது நம் சுபாவமாகி விடும். என விடை பகர்ந்தார்.

டாக்டர் டி.எம்.பி மகாதேவன் பகவானின் பெருமையையும் தனித்தன்மையையும் அவர் நமக்களித்த ஒளி நிறைந்த பாதையையும் இவ்வாறு விவரிக்கின்றார்:

ரமணரை அறிவது என்பது ரமணனாக இருப்பதே. அதாவது அத்வைத நிலையின் உன்னதமான அனுபவத்தை அறிந்தால்தான் ரமணனாக இருக்க முடியும். இல்லை யெனில் அவரை விளக்கம் மூலமே

வெறும் வார்த்தைகள் மூலமே அறிய முடியும். அவரைப் பற்றி விளக்கமாக அறிந்தால் பிறகு அவராகவே ஆகும் அனுபவம் நமக்கு தெளிவாக அமைந்து விடும். எனவே பகவானுடன் தொடர்ந்து தொடர்பு வைத்துக்கொண்டால் அதுவே அதிசக்தி வாய்ந்த சாதனையாகும்.

மௌனமாக, அசலமாக இருந்த தக்ஷிணாமூர்த்திக்கும் பேசி எங்கும் சென்ற சங்கரருக்கும் இடைப்பட்டவராக விளங்கினார் ரமணர். ஏனெனில் இந்த நாளில் நமக்கு அசலம், சலம் (மௌனம், வாக்கு) இரண்டைப் பற்றியும் விளக்கம் தேவை. உபநிஷத் காலத்திலிருந்து பாரம்பரியமாக வரும் ஆன்மிக ஒளிநிறைந்த பாதையைப் பற்றியே பகவானும் எழுதவும் பேசவும் செய்தார். ஞான ஒளியைத் தேடியும் அதை அடையவும்தான் நாம் முயற்சி செய்ய வேண்டும். இதுதான் நம்மைக் காக்க முடியும். இதுதான் பகவான் நமக்குக் கூறும் செய்தி.

இந்த ஒளி என்ன? அதுதான் ஆத்ம விசாரத்தின் ஒளி. 'நான் யார்?' விசாரத்தின் ஒளி. இந்த ஒளியை யார் வேண்டுமானாலும் அடையலாம். அவன் எங்கே பிறந்திருந்தாலும் அவனுடைய நம்பிக்கைகள் என்னவாயிருந்தாலும் அவன் யாராக இருந்தாலும் இதை அடையலாம். உபநிஷத்துக்கள் பலவிதமான ஆத்ம விசார முறைகளைப் பற்றிக் கூறுகின்றன. பகவான் மட்டும்தான் ஆன்ம விசாரத்தை நமக்காக எளிதாக்கி இருக்கிறார்.

உபதேசங்கள், சம்பாஷணைகள், தியானம் முதலியவற்றைவிட முக்திக்கு குருவின் அருள் மிகவும் அவசியம். மற்றவைகள் எல்லாம் இரண்டாம் பட்சம் என்றும் பகவான் வலியுறுத்துகின்றார்.

எப்போதும் குருவுடனே இருக்க இயலாது. உலக நியமங்கள் சில நேரங்களில் குருவை பிரிந்து

இருக்க வேண்டிய நிலை வருகின்றதே. குருவை விட்டகன்றாலும் மன அமைதியும் தெளிவும் வேண்டும் என்று நாம் நினைக்கலாம்.

கடவுளோ, குருவோ, எங்கோ, வெளியிலில்லை, உமக்குள்ளேயே இருக்கிறார்; உமது ஆத்ம ஸ்வரூபமாகவே இருக்கிறார் என்பதே பகவானின் விடையாகும். இவ்வுண்மையைப் புரிந்து கொண்டு உமக்குள்ளேயே குருவைக் கண்டால், அவரிடமிருந்து பிரிவே யிராது. குரூபதேசம் எப்போதும் இடைவிடாது நடந்து கொண்டேயிருக்கிறது. அதுதான் ஸர்வோத்தமமாம் மௌனோபதேசம். ஆகவே குருவும் நாமும் எப்போதும் இணை பிரியாதிருக்கிறோம்; அவர் எப்போதும் உபதேசித்துக் கொண்டேயிருக்கிறார்.

மேலும், உண்மையான குரு என்றுமே சித்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதேயில்லை. அப்படியேதும் நடந்தால் அது அவரவர் பிராரப்த வசத்தால் நடப்பது என்றும் தன்னால் எதுவுமே நடக்காது என்றும் கூறுவது உண்டு. உலகத்தில் பெரிய சித்தி என்பது என்றும் சித்தமாய் உள்ள உட்பொருளை தேர்ந்து அதனுடன் ஒன்றி இருத்தலே. ஏனைய பிற சித்திகளெல்லாம் சொப்பனத்திற்கு ஒப்பானவை. சாதகர்கள் போகத்திலும் சித்தியிலும் மயங்கக் கூடாது. உண்மையான சித்தி என்பது மன சாந்தியாகும். இதுவே முக்தியாகும்.

பகவான் இங்கு வந்த பிறகு அருணாசலத்தின் எல்லையைத் தாண்டியதில்லை. அவர் உலகத்திடம் செல்ல வேண்டும் என்று எந்தவிதத் தேவையுமில்லை. ஒளிக்கு இருளின் தேவையில்லை. இருளுக்குத்தான் ஒளிதேவை. நீங்கள் ஒளியை வரைய வேண்டியதில்லை. ஏனெனில் அது எல்லாவற்றையும் பிரகாசிக்கிறது. எந்தவொரு விளம்பரமும் இல்லாமல், தம்பட்டமும் இல்லாமல், எந்தவித பிரச்சாரமும் இல்லாமல்

அருணாசலத்திலிருந்த ஒளி எங்கும் பரவியது. அந்த ஒளியின் மீதுதான் நாம் தியானம் செய்ய வேண்டும்.

பொதுவாக பகவான் அமைதியாக இருந்தார். மௌனமே அவர் மற்றவர்களிடம் தொடர்பு கொண்ட மொழி. தற்பொழுது உலகத்தில் உள்ளவர்களெல்லாம் புதிது புதிதாகத் தொடர்பு கொள்ள பலவித சாதனங்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றனர். இந்த மாதிரி பல உபகரணங்கள் இருந்தும்கூட தொலைத்தொடர்பு மேலும் மேலும் மனித வாழ்வினை சிக்கலாக்கிக் கொண்டு செல்கின்றது.

ஆனால் இங்கேயோவெனில் எந்தவித பேச்சுத் துணையுமில்லாமல் அந்தப் பரம்பொருள் சோபாவில் சாய்ந்து கொண்டு ஆச்ரமத்தில் ஹாலின் ஒரு மூலையில் இருந்து கொண்டு தன் முன்னால் உட்கார்ந்து உள்ளவர்கள் மட்டுமல்லாமல் எங்கெங்கெல்லாம் பக்தர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று பக்தர்களுடன் தொடர்பு கொண்டார். தற்பொழுது நம்மிற் பலருக்கு இந்த மௌனத்தின் மொழி புரியா விட்டாலும் இறுதியில் கண்டிப்பாக அதைப் புரிந்து கொள்வோம்.

சாதகனின் முதற்படி பயிற்சி புலனடக்கம். ஐம்புலன்களை கவரும் மாயையில் சிக்காமல் இருக்க, திருவள்ளுவரும்

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து

எதிரிகளை கண்டால் ஆமை தனது உடலனைத்தையும் உள்ளிழுத்து அசைவற்றிருக்கும். அதைப்போல் உலக மாயைகளை எதிரிகளாக பாவித்து மனத்தை அதில் செலுத்தாமல் அடக்கிக் கொள்ள வேண்டும். ஒரு பிறவியில் ஐம்புலன்களையும் அடக்கினால் ஏழு பிறவிகளுக்கும் அது காப்பாற்றும்.

*ஆடுகாட்டி வேங்கையை அகப்படுத்துமாறு போல*
*மாடுகாட்டி என்னை நீ மதிமயக்கலாகுமோ*
*கோடுகாட்டி யானையை கொன்றுரித்த கொற்றவா*
*வீடுகாட்டி என்னை நீ வெளிப்படுத்த வேணுமே*

*கட்டப்பட்ட ஆடு தன் இரை என மயங்கி சிக்கிக் கொள்ளும் வேங்கையை போல என்னை இந்த உலக செல்வங்களை காட்டி சிக்க வைக்காதே. எனக்கு என் நிஜ சொரூபத்தைக் காட்டி வீடு பேற்றை அருள்வாயாக என்று சிவ வாக்கியரும் கடவுளிடம் இந்த பலவீனத்திலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு இவ்வாறு வேண்டிக்கொள்கிறார்.*

*சிரத்தையுள் ளோனே திருத்திப் பொறியைக்*
*கருத்தில் விடாதே கருதி மருவுவான்*
*மெய்யறிவு மேவிப்பின் மேலான சாந்தியினை*
*யெய்துவான் சின்னாளி லிங்கு – (பகவத் கீதாசாரம் 18)*

*"உண்மையை அறிய, ஆத்ம வித்தையில் சிரத்தையுள்ளவனாய் மனதில் விஷயங்களைப் புகவிடாமல், சொரூபத் தியானத்திலேயே ஊன்றிய சிரத்தையுடையவனாய், இந்திரியங்களை அடக்கியவனாய் உள்ளவன் ஞானத்தை அடைவான். அவன் விரைவிலேயே மேலான சாந்தியை அடைவான்" என்று பகவான் ரமண மகரிஷிகள் பகவத் கீதாசாரப் பாடலில் இந்திரியங்களை அடக்கி மேலான சாந்தியை அடைவது குறிப்பிடுகிறார்.*

*செயற்கை நுண்ணறிவு எனப்படும் (A.I – Artificial Intelligence) தொழில்நுட்பம் தற்காலத்தில் அனைத்து துறை பயன்பாட்டிலும் வேகமாக வளர்ந்து வருகின்றது. ஆன்மிகத்தில் A.I என்பது, 'மனம் அடங்கினால் மார்க்கமுண்டு' எனும் பகவான் உபதேசத்தின்படி நோக்கினால், A.I என்பது 'அடங்கி இரு' அல்லது 'ஆன்மாவில் இரு' (Adangi Iru/Abide in the Self) என்று பொருள் கொள்ளலாம்.*

*சமீபத்தில் இந்திய விஞ்ஞானிகள் சந்திரனில் விண்கலனை வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளனர். அதற்கு அவர்கள் முதலில் விண்கலனை விண்ணில் ஏவுதல், வட்டப்பாதையில் சுற்றச் செய்தல், நிலையில் இருந்து படிப்படியாக உயர்த்துதல், பின்னர் சாதகமான சூழ்நிலையில் கீழே இறக்கி இலக்கினை அடைதல் என்னும் யுக்தியை பயன்படுத்தினர். இதே வழியில் சாதகர்களையும் குருவானவர் முதலில் இலக்கினை நோக்கி செலுத்தி, தனது அருள்வட்டப் பாதையில் சுற்றிவரச் செய்வார். பின்னர் படிப்படியாக ஆன்மிக நிலையின் அடுத்தடுத்த கட்டத்திற்கு உயர்த்துவார். இறுதியாக அகங்கார மமகாரங்களைக் குறைத்து தக்க சமயத்தில் சாட்சாத்காரம் எனும் இலக்கினை அடையச் செய்வார்.*

*சாதகனுக்கு மித ஆகாரம், மித தூக்கம் என்று அனைத்துமே அளவோடு இருத்தல் அவசியம் என்று பகவான் அடிக்கடி குறிப்பிடுகிறார். தற்காலத்தில் மின்னணு, தொழில்நுட்ப சாதனங்களையும் மிதமாக பயன்படுத்துதலும் அவசியமாகின்றது. கைபேசி, இணையம், சமூகவலைதளம் போன்றவைகளின் பயன்பாட்டைத் தவிர்க்கும் நேரம் 'டிஜிட்டல் விரதம்' என்று அழைக்கப்படுகிறது. மௌனவிரதம், உண்ணா நோன்பு ஆகியவற்றைப் போன்று டிஜிட்டல் விரதம் என்பதும் டிஜிட்டல் சாதனங்களிலிருந்தும், டிஜிட்டல் உலகத்திலிருந்தும் விலகி இருப்பதாகும். அவசியத் தேவையின் பயன்பாட்டிற்குப் பிறகு அதிகபட்ச நேரம் இந்த டிஜிட்டல் உண்ணாவிரதத்தை முயற்சித்து பகவான் கூறும் ஆழ்ந்த மௌன நிலையில் – இடையறாப் பேச்சினை நிகழ்த்தி – மனம் அடக்கும் உபாயத்தைக் கடைப்பிடித்தால் ஆன்மாவை உணர்ந்து மனச் சாந்தியைப் பெறலாம்.*

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 30. இரவில் அருணாசலம்

இன்று இரவு தியானம் செய்து முடித்தபின் நான் அண்ணாமலை மீது ஏறிச் சென்று அங்கே மழை பெய்ததின் காரணமாக மேலிருந்து உருண்டு வந்து ஆச்ரமச் சுவரின் ஓரம் ஒதுங்கி வீழ்ந்து இருந்த ஒரு கற்பாறை மீது அமர்ந்தேன். இரவு வேளை வெப்பமாகவும் அதேசமயம் அமைதியாகவும் இருந்தது. கீழ்த்திசையில் மேகங்கள் சூழத் துவங்கி இருந்தன. கீழ்க் கடலிலிருந்து எழுந்த மழை முகில்கள் மெதுவாக, மலையை நோக்கி நகரத் துவங்கின.

வானத்தினை நோக்கி எழுந்திருந்த அருணமலையின் சிகரம் மிக்க ஒழுங்கோடு படம் வரைந்ததுபோல் இருந்தது. மலையின் பெருத்த கீழ்ப்பகுதி காரிருளில் சூழப்பட்டு கண்ணிற்குப் புலப்படாது இருந்தது. அது கண்ணுக்குப் புலப்பட்ட தருணங்களிலும் கவர்ந்திழுக்கும் அருணாசலத்தின் காந்த சக்தியை நான் எப்போதும் உணராமல் இருந்ததில்லை. மகரிஷியைப் பொருத்தமட்டில் அவர் எல்லா விசேஷ நம்பிக்கைகளையும் கடந்து இருப்பார் என்பதையும் இந்த ஜகம் முழுவதையும் நம்முடைய புலன்களின்மீது நடைபெறும் ஒரு மாய விளையாட்டு என்று கருதுபவர் என்பதையும் நான் அறிவேன். எனவே, மகரிஷிக்கும் அருணாசலத்துக்கும் இடையே எத்தகைய ஓர் அறியவொண்ணாத் தொடர்பு உள்ளது என்பதை என்னால் தர்க்கபூர்வமாக விளக்கமுடியவில்லை. அதேசமயம் பகவான் தனது நூல்களில் அருணாசலத்தை

மிகப்பெரிய மரியாதையுடனும், பேரன்புடனும் வழுத்துகிறார் என்பதையும் மறுக்க இயலாது. இந்த விவரிக்க ஒண்ணாத மலையீட்டின் குறியீட்டுப் பொருளை அறியாதவர்க்கு இது ஒரு மறை பொருளாகவே தோற்றமளிக்கும்.

இரவு அமைதியான இரவு தியான வேளையில் நான் புதிதாகக் கண்டுபிடித்த சாதாரண பார்வைக்குப் புலப்படாத ஒன்றை ஆழ்மனத் தியானத்தில் காணும் வழியைப் பயன்படுத்த விரும்பினேன். இந்தப் புது வழியின்படி முதலில் மனத்தில் எந்தவிதமான எண்ணத் தோற்றத்திற்கும் இடம் கொடாமல் சுத்திகரிக்க வேண்டும். நம் உள்ளே இதயத்தின் ஆழத்தில் இருக்கும் அந்தச் சாட்சி ஒன்றையே நோக்கிலே கவனம் செலுத்த வேண்டும். சிறிது நேரத்தில் அது மனம் அறியக் கூடிய மொழியில் அறிவுறுத்தப்படுகிறது. அதாவது மனத்தின் வழியே அறிய ஒண்ணாத ஒரு மூலத்தினின்று உணர்வின் வழியே வழி கிடைக்கின்றது.

அருணாசலத்தின் மாபெரும் ஆத்மிக காந்த சக்தி இதனை அறியும் வழிமுறைகளை மிக எளிதாக்குகிறது. என் மனதிலிருந்து எல்லாப் பொருட்களையுமே ஒதுக்கிவிட்டு நான் தியானத்தில் மூழ்கும்போது, இதுகாறும் நான் தேடிவந்த ஒன்றை நெருங்குவதை உணர்கிறேன். மறைபொருள் நாட்டத்தின் விதியாகிய ஒவ்வொரு பொருளுமே, வெவ்வேறு உலகங்களில் தன்னையே ஒத்த வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளத் துவங்குகிறேன். ஆத்மிக நிலையில் நாம் ‘புருஷன்’ என்று கூறும் ஒன்று, பௌதிக உலகில் மாயையின் வழிக்குத் தோன்றும் பௌதிக மனித உருவாய் வெளிப்படல் போன்று, அருணாசலம் என்னும் தெய்வீக உரு, பௌதிக உலகில் அருணகிரியாய் வெளிப்படுகிறது. இந்த உலகில் வாழும் மனிதருக்கு உணரப்படுவதற்காக அந்த ஆத்மிகப்

*பேரொளி மலை உருவீல் வந்துள்ளது. இந்துக்கள் இந்த மலை உருவினையே சிவனுருவாக எண்ணி வழிபடுகின்றனர். பக்தர்களின் நம்பிக்கை யாதெனில், இந்த உலகம் தோன்றிய ஆதிகாலத்தில் சிவபெருமானே ஒரு ஒளி ஸ்தம்பமாய் தோன்றி அந்த ஜோதி உருவே பின்னால் மலையாக வடிவெடுத்தது என்பதாம். இந்தக் கிரி எனும் குறியீட்டை பௌதிக உருவில் மறைந்துள்ள ஆத்மிக சக்தி இக்காலத்தில் வெளிப்பட்டு இருப்பதாக நான் ஏன் கருதக் கூடாது?*

*'உயிர்த்தெழுதலுக்கு' ஒரு தலையாய தேவை உள்ளதாக நான் கருதுகிறேன். அசைவுறா பௌதிக இருப்பின் குறியீடாகத் திகழும் இம்மலையின் சிகரம் விண்ணில் அகநிலை உமிழும் ஒன்று. இது தனது மெய்யான தத்துவத்தை வழிபடுவோர்க்கு உணர்த்துகிறது. என் போன்ற பலருக்கும் அருணாசலம் மெய்யான தத்துவ ஞானத்தின் வழிகாட்டி.*

*பின்னொரு சமயங்களில் மகரிஷியே தன்னுடைய சுருக்கமான பொருள் பொதிந்த நடையில் அருணாசல தத்துவத்தை விளக்குவதை பலமுறை ஆழ்ந்து படித்தேன். அவர் கூறும் மிக சுவாரசியமான கருத்து என்னவெனில், அருணாசலத்தினை நம் மனதில் வைத்து தியானிப்பதே நமது ஆன்மிக நாட்டத்தையும் ஞான முகிழ்வுக்கும் தடைக்கல்லாக இருக்கும் எண்ண ஓட்டங்களை நிறுத்தும் சக்தி வாய்ந்த மார்க்கம் என்பதாம். அன்று இரவே, இந்த அறிதல் சரியானதே என்பதை என்னுள் அநுபவத்தில் உணர்ந்தேன்.*

*மகரிஷி, அருணாசலம் உலகியல் பொருட்களின் மீதுள்ள பற்றினையும், பௌதிக உலக மாயையையும் அழிக்கிறது என்று புகல்கிறார். ஒவ்வொரு முறையும் அருணாசலம் என்னும் நாமம் உச்சரிக்கும் பொழுதெல்லாம் அருணாசலத்தை நமது ஆன்மிகக் கலங்கரை விளக்கமாய் கருதுவோர் அதனை விவரிக்கும்*

போதெல்லாம் எனது எண்ணத்திலிருந்து உலகியல் பொய்ம்மைகள் மறைந்து அழிந்து, பேரான்மாவின் சத்யத்தில் ஒடுங்குவதை அனுபவபூர்வமாக உணர்கிறேன்.

மனத்தின் மொழியில் அறியக்கூடிய பொருட்களை மட்டுமே ஏற்றுக் கொள்வது என்பது அறிவுடைமை அல்ல என்பதை நான் விரைவிலேயே உணர்ந்தேன். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உடலில் செயலாற்றுலின் காரணமாகக் குறைந்து கொண்டே வரும் பௌதிக ஆற்றலை மீண்டும் உயர்த்த, உயரிய சக்திதரும் உணவை தேவையான அளவில் உண்டு வரவேண்டும் ஆனால் தான் உண்ணும் ஒவ்வொரு கவளத்திலும் எவ்வளவு அளவில் ரசாயனப் பொருட்கள் அடங்கி உள்ளன என்பதை அவன் அறிந்து கொள்ளத் தேவை இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு நாம் இயற்கையாக உண்கிறோமோ எவ்வளவுக்கெவ்வளவு உண்ணும்போது எண்ணங்களில் சிதைவு படாமல் உண்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு உடல் ஆரோக்யமாக உள்ளது என்பதை விஞ்ஞானமும் எடுத்துரைக்கிறது.

அதுபோன்றே அருணாசல தரிசனம் எனது ஆத்மிகப் பயணத்தில் சக்தி வாய்ந்த உந்து சக்தியாய் அமைந்திருக்கும்போது, அது எப்படி நிகழ்கிறது என்பதை நான் ஆராய்வதில் பயன் ஒன்றுமில்லை. உலகில் நிகழும் மிக முக்கியமான நிகழ்வுகளும், மிகவும் இயற்கையான, எளிதான விதத்திலேயே ஏற்படுகின்றன. வெறும் அர்த்தமற்ற ஆர்வத்தாலேயோ அன்றி வெறும் பரிசோதனைக்காகவோ சத்யத்தைத் தேடும் ஒருவனுக்கு இது ஒரு வழிகாட்டுதல் ஆகவும் பாடமாகவும் அமைகிறது. அவனுள் எழும் இந்த சத்க வேட்கை அவனுடைய உயிர்க்கு உயிராய் அமைந்து, அதன்றி அவன் வாழமுடியாது என்ற நிலையை ஏற்படுத்துகிறது.


அருணாசலத்தின் சிகரம் எப்போதும் மேல் நோக்கியே உயர்கிறது. மகரிஷிபோலவே அதுவும் எப்போதும் மௌன மொழியிலேயே பேசுகிறது. அருணாசலத்திற்கும், பகவானுக்கும் இடையே உள்ள தொடர்பும் உறவும் யாது? எனக்குத் தெரிந்தது எல்லாம் அருணாசலத்தின் ஆழங்கான இயலாத ஆன்மிக சூழ்நிலை எனக்கு மெய்யான ஆன்மிக அதிர்வை அநுபவிக்க வைக்கிறது என்பதே. நாம் பக்குவம் அடையும்போது இந்த அநுபவம் தானாகவே வருகிறது. இத்தகைய அநுபவம் சித்திக்காவிடில் நாம் நமது பாதையில் முன்னேறுகிறோம் என்ற உறுதி நமக்கு இருக்காது. இந்த அநுபவம் இல்லையெனில் நாம் பயின்ற சித்தாந்தங்கள் எல்லாம் பொடிப்பொடியாகச் சிதறிவிடும். முதல் முயற்சியே தோல்வியுறும் அல்லது நமது தோல்வியால் நாம் துவண்டு முயற்சியைக் கைவிட்டு விடுவோம். ஏனெனில் இத்தகைய முயற்சிகள் எல்லாமே மகரிஷி கூறுவதுபோல் மனத்தை அடிப்படையாகக் கொண்டு பிறந்தவை.

இந்த உடல்–மனம் சார்ந்த பௌதிக ப்ரக்ஞையின் கட்டுக்களை நான் இந்த அநுபவங்களின் மூலம் முன்னமே கடந்திராவிடில், நான் எனது தியானத்தைப் பதித்து எனது வாழ்வின் குறிக்கோளைக் கண்டிருப்பேன்? நான் என்று பௌதிக உடல்மூலம் அறிவதையும், புலன்களின் மூலம் உணர்வதையும் அவை எழும் இடத்திலேயே விட்டுவிட வேண்டும். இதை நான் இப்போது தெளிவாக புரிந்து கொண்டேன்.

ஆனால், இந்தப் பேருண்மையை நான் எல்லா நேரத்திலும் ஞாபகத்தில் இருத்திக் கொள்ள முடியுமா? பெரிய விஷயங்களின் கைப்பாவையாக ஆடுவதைத் தவிர்க்க முடியுமா? வெளியோடும் புலன்கள் இந்தப் பேருண்மையில் இருந்து வெளியே இழுப்பதைத் தவிர்க்க முடியுமா? இன்னும் வந்து கொண்டு இருக்கிற

*பல்வேறு நாட்களின் அணிவகுப்பின் போது எனது தியானம் ஒரே நேர்க்கோட்டில் இருந்து விலகாமல் இருக்க என்னால் இயலுமா? நான், நம்பியாக வேண்டிய ஒரு உட்குரல், இல்லை, இல்லை. நீ இன்னும் அதற்கு ஆயத்தம் ஆகவில்லை என்று கூறுகிறது. அப்படியெனில் நான் எனது ஆன்மிக பரிணாமத்தில் முன்னேறியும், பின்னேறியும் எழுச்சியுடனும் வீழ்ச்சியுடனும் ஒளியுடனும் மற்ற இருளினுடனும் தத்தளித்துக் கொண்டு இருக்க வேண்டுமா? வாழ்க்கை எனும் மிகப் பெரிய பாடசாலையில் ஒவ்வொரு மாணவனும் சந்திக்க வேண்டிய கேள்வி இது. அதேசமயம் அந்தப் பரம்பொருளுடன் இடையறாத தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு அந்தச் சமயத்தில் கரைந்து விடுகிறானோ அவனே ஒரு மாமனிதன்தான். தன்னுடைய ஆன்மிக ஊக்கத்திற்கு ஆதாரமாகிய அருணாசலத்துடன் அவன் சதா ஒன்றி விடுகிறான். அந்த மஹா புருஷனின் பாதங்களில் சரண் அடையும் பாக்கியம் எனக்கு வாய்த்து உள்ளது.*

*எதுவுமே வாழ்வில் ஒரு காரணமின்றி வெறுமனே நிகழ்வதில்லை. எல்லா நிகழ்வுக்குமே ஒரு நோக்கம் உள்ளது. அருணாசலத்தின் பேரொளி ஆத்மிக முன்னேற்றத்திற்கான படிகளைக் காண்பிக்கும். எல்லா சத்யங்களிலும் மிகப் புதிரான ஒன்றாகிய வாழ வேண்டும் எனில் ஒருவன் தன்னையே இழக்க வேண்டும் என்பதன் ஆழ்பொருள் எனக்கு முன்னமேயே வெளிப்படுத்தப்பட்டு உள்ளதல்லவா? நாம் நம்முடைய வெளிமுகமான 'நான்' என்பதை இழக்க வேண்டும். பகவான் கூறுகிறார், "இப்பூமியில் தமது பொய்ம்மையைச் சார்ந்துள்ள தமது வாழ்வின் நிலையை உணர்ந்து அந்த பொய்ம்மையை உதறித் தள்ளி, அதனை முற்றிலும் அழிக்கவல்ல ஓர் அரு மருந்து உள்ளது. அந்த அரு மருந்து உன்னையே அழிக்காமல், உனது பொய்ம்மையை மட்டுமே,*



*அடியோடு அழிக்க வல்லது. அதுவே அருணாசலம் என்பதை அறிவாய்."*

இந்த இரவு நேரத்தில் மீண்டும் அருணகிரியின் பேரருளைக் காண்கிறேன். நிலா தொடுவானை நெருங்கிவிட்ட நேரம். கீழ்திசைக் கடலிலிருந்து எழுந்து பயணம் செய்து வந்த கருமுகில்களின் நிழல்கள் அருணாசலத்தை மறைக்கின்றன. நேரம் கடந்து கொண்டும் இருக்கிறது. அருணகிரியின் அடிவாரத்தில் உள்ள ரமண ஆஸ்ரமத்தில் விளக்கொளி ஏதும் தென்படவில்லை. சாலையிலிருந்து பாதம் பதிக்கும் ஒலிகளோ, குரல் ஒலிகளோ எதுவுமே கேட்கவில்லை.

எங்கும் மௌனமும், சாந்தியும் நிரம்பி உள்ளது. வைகறை நெருங்கும் வேளையில் குளிர்ந்த கீழ்த்திசை காற்று வீசத் தொடங்கி உள்ளது.

# தேசிய எழுச்சிக்கு ஸ்ரீரமண மகரிஷி அளித்த கொடை

**Dr. வேங்கட். S. ரமணன்**

*ஸ்ரீரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா தொடர்பாக நேரு நினைவாலய பொருட்காட்சி சாலையும், நூல் நிலையமும் இணைந்து நடத்தும் இந்நிகழ்ச்சியில் என்னை உரையாற்ற அழைத்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*என்னுடைய இந்தச் சொற்பொழிவு இரண்டு பாகங்களைக் கொண்டது. முதலாவது தேசிய எழுச்சிக்கு ஸ்ரீரமண மகரிஷி அளித்த கொடை, இரண்டாவது பாரதத்தின் ஆன்மிகப் பாரம்பர்யத்துக்கும் கலாச்சார எழுச்சிக்கும் பகவான் ஆற்றிய பங்கு.*

*சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த புகழ்மிக்க மனோதத்துவ அறிஞர் கார்ல் யூங் கூறுகிறார்: “ஸ்ரீரமணர் இந்திய பூமியின் மெய்ம்மையான திருமகன். பாரத விண்ணின் வெண்மைப் பரப்பில் உள்ள தூய வெண்மைப் புள்ளி. பகவான் ஸ்ரீரமணரின் வாழ்விலும் உபதேசத்திலும் மிகத் தூய பாரதத்தினைக் காண்கிறோம். இது பல ஆயிரக்கணக்கான ஆத்மிகம் பரவிய ஆண்டுகளின் தூய நாதம். ஸ்ரீரமணரின் வாழ்வும், உபதேசங்களும் இந்திய வாழ்வுக்கு மட்டும் அல்ல மேற்கத்திய உலகிற்குமே மிக முக்கியமானவை.”*

*உலகாயதம் சற்றும் தொடாத ஒரு மகான் ஸ்ரீரமண மகரிஷி. மறைகள் அனைத்தும் மொழியும் பேருண்மைகள் முழுதும் உருவெடுத்து வந்த*

ஒப்பற்ற தூய்மை நலம் வாய்ந்தவர். எப்போதோ பல நூற்றாண்டுகட்கு ஒரு முறையே ஸ்ரீரமணர் போன்ற ஆன்மிகப் பெருமகன் இந்தப் பூமியில் வந்து தோன்றுகிறார். அத்தகைய அற்புதத் தோற்றம் நிகழும்போது, மனிதகுலம் முழுதுமே அதனால் பலன் பெறுகிறது. அச்சமயம் ஒரு புதிய யுகத்தின் எதிர்பார்ப்பு மனிதகுலத்தின் முன்னே எழுகின்றது.

பக்தர்கள் அவரை 'பகவான்' என்றே அழைக்கின்றனர். நானும் இந்தச் சொற்பொழிவில் அவரை 'பகவான்' என்றே குறிப்பிடுகின்றேன்.

**தேசிய எழுச்சியில் பகவான் பங்கு:**

பகவான், தன்னுடைய 16ஆவது வயதில், மதுரை நகரில் மரண அனுபவம் நிகழ்ந்த பிறகு, திருவண்ணாமலைக்கு வந்தார். 1896ஆம் ஆண்டு, ஜூலை மாதம், வெப்பம் மிகுந்த ஒரு கோடை நாளில் திடீரென அவருக்கு தன் வாழ்நாள் முடிவுக்கு வந்து விட்டதாகத் தோன்றியது. இந்த அச்சத்தை நிவர்த்திக்க அவர் யார் உதவியையும் நாடவில்லை. மிக்க அமைதியுடனும், துணிவுடனும் அவர் மரணத்தை எதிர்கொண்டார். இதுகாறும் வெளிநோக்கிச் சென்று கொண்டிருந்த தன் மனத்தை உள்நோக்கித் திருப்பி, "இந்த மரணம் யாருக்கு நிகழ்கிறது?" என்பதை அவர் ஆய்ந்தார். மரணம் என்பது இந்த உடலுக்கு மட்டுமே நிகழ்கிறது. அனைத்துப் படைப்பிலும் உள்ளூடாய் இலங்கும் ஆத்மாவுக்கு மரணம் இல்லை என்பதை அவர் உணர்ந்தார். அதைத் தட்டி, தன்னுள்ளே 'நான்-நான்' என்னும் மெய்யுணர்வு அதிர்ந்து கொண்டே இருப்பதையும், ஆத்மா தன்னுள்ளே விழித்து எழுவதையும் உணர்ந்தார். இந்த பௌதிக உடலையும், மனத்தையும் கடந்த எல்லையற்ற பரம்பொருளே நான் என்பதை அவர் நேரடியாக உணர்ந்தார். மரண பயம் உடனே நீங்கியது. அந்தப்

பதினாறு வயது சிறுவன் வேங்கடராமன் அக்கணமே பரமாத்மாவாகிய பிரம்மத்தில் நிலைபெற்றார். அப்போதே அருணாசலத்தின் தெய்வீக சக்தி அவரை முற்றிலும் ஆட்கொண்டது. அதே தெய்வீக சக்தி 1896 செப்டம்பர் முதல் நாள், அச்சிறுவனை மதுரையிலிருந்து திருவண்ணாமலைக்கு அழைத்து வந்தது. அது நாள் முதலாக அருணாசலத்தின் அதிசய சக்தி பகவானின் வாயிலாக ஆன்மிகக் கதிரொளியையும், அருட்பொழிவையும் பாரத நாட்டில் பரப்பி இந்நட்டின் ஆன்மிக எழுச்சிக்கு தூண்டுகோலாய்த் திகழ்ந்தது.

இதே சமயத்தில்தான் 1896ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிகாகோ சர்வசமயப் பேரவையில் தம் ஆத்மிக கர்ஜனையை எதிரொலிக்கச் செய்து விட்டு சிகாகோ, நியூயார்க், ஆக்ஸ்போர்டு போன்ற பல நகரங்களிலும் தனது ஆன்மிகப் பேருரைகளை நிகழ்த்தி விட்டு ஸ்வாமி விவேகானந்தர் இந்தியா திரும்பி வரும் நேரம். அதன் பின்னர் சில காலத்துக்குள் ஸ்ரீராமகிருஷ்ண இயக்கம் தொடங்கப் பெற்றது. இதே 1896ஆம் ஆண்டுதான் நமது தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' ரவீந்திரநாத் தாகூரால் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பாடப்பெற்றது. 1896ஆம் ஆண்டு பகவானின் அருணை விஜயத்தையும் அவர் அருணாசலத்துடன் தம்மை முழுமைப் படுத்திக் கொண்டபின் உடனே நிகழ்ந்த இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் 'தற்செயல்' என்று கூற முடியாதல்லவா!

ஸ்ரீ ரமண மகரிஷி, 'மௌன குருபரன்'; உண்மையில் தக்ஷிணாமூர்த்தியின் அவதாரமே ஆவார். அவரது உபதேசம் பெரும்பாலும் மௌனத்தின் மூலமே நிகழ்ந்தது. அதை உணர்ந்த அனைவருக்கும் மாபெரும் ஆன்மிக சக்தி வெளிப்பட்டது. அவரது மௌனக் கதிர்வீச்சு வெறும் ஜடமான ஒன்றல்ல. அது ஒரு மாபெரும் இயங்கு சக்தி. அதன் கதிரியக்க வளையத்துள்

வந்த அனைவர் இதயத்திலும் அது ஆன்மிக அதிர்வுகளை ஏற்படுத்தி அனைவரையும் சக்திமானாக ஆக்கியது.

சுப்ரமண்ய பாரதி, சுத்தானந்த பாரதி, திலீப் குமார் ராய், சரோஜினி நாயுடு, ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய போன்ற பெரும் கவிஞர்கள் பகவானது ஆன்மிக சக்தியால் ஈர்க்கப்பட்டனர். ஜஸ்டிஸ் சுந்தரம் செட்டியார், ஜஸ்டிஸ் என். சந்திரசேகர ஐயர் போன்ற நீதி அரசர்களும் பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள ஸ்திதப் ப்ரக்ஞ முழு லட்சணங்களாலும் பகவானிடம் கண்டு, அவரிடம் இருந்து செயலாக்கம் பெற்றனர். Dr. ராஜேந்திர பிரசாத், ஸ்ரீ ஜமனாலால் பஜாஜ், மனு சுபேதார், Dr. மேல்கோடே, Dr. O.P. ராமசுவாமி ரெட்டியார் போன்றோர் பகவானை நேரில் சந்தித்து, தம் ஐயங்கள் நீங்கப் பெற்றனர்.

ஓரன்பர் பகவானிடம், "இந்த நாட்களில் வாழ்ந்து கொண்டு இருக்கும் எம் போன்றோர்க்கு, பண்டைக் காலத்தில் வாழ்ந்திருந்த மகாத்மாக்களின் ஆன்மிகத் தவம் என்னும் புதையல் கிடைத்து, நாம் பயன்பெற இயலுமா?" என்று வினவினார்.

பகவான் அதற்கு, "அத்தகைய புராதன காலத்து மஹான்கள் தவத்தின் அருள் இன்றி இக்காலத்தின் ஆன்மிக மற்றும் அரசியல் எழுச்சி வர இயலுமா?" என்று விடையிறுத்தார்.

பகவான் நம் தேசத் தந்தையான மகாத்மா காந்தி மீது பெருமதிப்புக் கொண்டு இருந்தார். பகவான் ஒருமுறை, "காந்திஜீ இறைவனிடம் பூர்ண சரணாகதி செய்து, இறைவன் வழிநடத்துதலின் படியே எந்தவித சுயநல நோக்கமும் இன்றி செயலாக்குகிறார். அவர் பலன் எதையுமே எதிர்பாராது எந்த விளைவு நேரினும் அதனை அமைதியாக எதிர்கொள்கிறார். தேசச்

சேவையில் ஈடுபடுவோரின் செயல்பாடு இங்ஙனம்தான் இருக்கவேண்டும்” என்று கூறினார். ஒருமுறை பகவானது அன்பர் ஒருவர், ‘ஹரிஜன்’ இதழில் தனது ராஜ்கோட் விஜயம் பற்றி காந்திஜி எழுதியுள்ள பகுதியை படித்துக் காட்டினார்.

“இறைவனது செயல்பாடு எவ்வளவு மர்மமாக உள்ளது! இந்த ராஜ்கோட் பயணம் எனக்கும் ஒரு அதிசயமே! நான் எங்குச் செல்கிறேன், ஏன் செல்கிறேன்? எதற்காக? இவை எதைப் பற்றியுமே நான் எண்ணவில்லை. கடவுள் என்னை வழிநடத்தினால், நான் எதை எண்ண வேண்டும்? ஏன் எண்ண வேண்டும்? எந்த எண்ணம் எழுந்தாலும், அது இறைவன் வழிநடத்தலுக்குக் குறுக்கே வரும் இடையூறே!

“உண்மை யாதெனில், எண்ணப் போக்கைத் தடுத்து நிறுத்த முயற்சி எதுவுமே தேவை இல்லை. எண்ணங்கள் எழுவதே இல்லை. அப்படி என்றால் மனம் சூன்யமாகி விட்டது என்பது பொருள் அல்ல. நான் சொல்ல வருவது யாதெனில், எனது நோக்கத்தில் எங்ஙனம் வெற்றி கொள்வது என்பது குறித்து நான் சிந்திப்பதே இல்லை.”

பகவான், “இது எவ்வளவு ஆணித்தரமான உண்மை!” என்று கூறி, அந்தக் குறிப்பில் உள்ள அத்தனைக் கருத்துகளையும் உறுதிப்படுத்தினார்.

காந்திஜியும் பகவான்மேல் பெருமதிப்புக் கொண்டு இருந்தார். சங்கர்லால் பாங்கர், ராஜேந்திர பிரசாத், ஜம்னாலால் பஜாஜ் போன்று அவரைச் சுற்றியிருந்தோர் மனச் சோர்வும், குழப்பமும் உற்றபோது, காந்திஜி அவர்களிடம், “நீங்கள் ரமணாச்ரமத்துக்குப் போய் ஒரு மாதம் இருந்துவிட்டு வாருங்கள்” என்று அறிவுறுத்துவார். வழக்கமாக அவர்கள் ஒரு

*வாரம் அல்லது பதினைந்து நாட்களிலேயே முழு உற்சாகம் பெற்றுத் திரும்பி வருவார்கள். மீண்டும் தம் கடமைகளில் முழுமூச்சுடன் ஈடுபடுவார்கள். ராஜேந்திர பிரசாத் சபர்மதி ஆஸ்ரமத்தில் காந்திஜியைச் சந்தித்து, "இந்தப் பரபரப்பான சுதந்திரப் போராட்ட வேலைகளில் இருந்து சில நாட்களாவது ஓய்வு வேண்டும்" என வேண்டியபோது காந்திஜி, "உனக்குப் பூரண அமைதி வேண்டுமெனில், ஸ்ரீ ரமணாச்ரமத்திற்குச் சென்று ஸ்ரீ ரமண மகரிஷியின் சந்நிதியில் எந்த ஒரு கேள்வியும் கேட்காமல் அமர்ந்து விட்டு சில நாட்களுக்குப் பின்னர் திரும்ப வாருங்கள்" என அறிவுரை கூறினார். அதன்படியே ராஜேந்திர பிரசாத் 14 ஆகஸ்ட் 1938-இல் ரமணாச்ரமம் வந்து பகவான் சந்நிதியில் ஒரு வாரம் இருந்தார். அதன்பின்னர் விடைபெறும்போது, ராஜேந்திர பிரசாத் பகவானிடம், "பகவானே! மகாத்மா காந்தியே என்னைத் தங்களிடம் அனுப்பினார். அவருக்குக் கூற செய்தி ஏதும் உள்ளதா?" என்று வினவினார். அதற்கு பகவான், "அத்யாத்ம சக்தி அவருள்ளே இருந்து, வழிநடத்திக் கொண்டு உள்ளது. அதுவே போதும். வேறு எதுவும் தேவையில்லை. இங்கே வேலை செய்யும் அதே சக்தி அங்கேயும் வேலை செய்கிறது. இதயம் இதயத்தோடு பேசிக்கொண்டு இருக்கும்போது, வார்த்தைகட்கு தேவை ஏதும் உண்டா என்ன?" என்றார்.*

*மாபெரும் கவிஞர் சரோஜினி நாயுடு கூறினார்: "இங்கு இரண்டு மகாத்மாக்கள் பாரதத்தின் ஆன்மிக மறுமலர்ச்சிக்காக செயலாற்றிக் கொண்டு உள்ளனர். ஒருவர் மகரிஷி — அவர் நம்மை முழு அமைதியில் ஆழ்த்துகிறார். மற்றொருவர் மகாத்மா — அவர் நம்மை ஒருகணம் கூட ஓய்வெடுக்க விடுவதில்லை."*

*ஓர் அன்பர் பகவானிடம் வந்து, "காந்திஜி எரவாடா சிறையில் அனுசரிக்கும் 21 நாள் உண்ணாவிரதத்தில்*

நானும் கலந்து கொள்ளலாமா” என்று வினவியபோது, பகவான் புன்முறுவலுடன், “உனக்கு இத்தகைய எண்ணம் எழுவது நல்ல நிமித்தமே. ஆயினும் உன்னால் இப்போது என்ன செய்ய இயலும்? காந்திஜி தமது மாபெரும் தவத்தின் மூலம் பெற்றுள்ள ஆன்மிக சக்தியை நீயும் பெற முயல்வாய். அதன்பின் உன் முயற்சியில் நீ வெற்றி பெறுவாய்” என்று கூறினார். இதுவே முக்கியமான தேவை. ஒருவனது கர்மயோகம் வெற்றி பெற வேண்டுமெனில், அவன் முதலில் தனது உள்ளார்ந்த ஆன்மிக சக்தியை முழுதும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை பகவான் எப்போதும் வலியுறுத்தினார்.

மகாத்மா காந்தியின் எழுத்துக்களின் தலைமைத் தொகுப்பாளரும், மாபெரும் ரமண பக்தருமான பேராசிரியர் சுவாமிநாதன் கூறுகிறார்: “தேசிய விடுதலை இயக்கம் வெற்றிபெற வேண்டும் எனக் கருதியே விதியானது இந்த இரு மாபெரும் மனிதரும் நேரடியாகச் சந்திக்க விடாமல் தனித்தே வைத்திருந்தது. ரமண மகரிஷி ஞான வானின் கதிரவன். மகாத்மா காந்தியோ கடையினும் கடையாருக்கும் நிம்மதி அளிக்கும் மென்மையான நிலா. நிலா நேருக்கு நேர் கதிரவனைச் சந்தித்தால் அதன் சக்தி வாய்ந்த கிரணங்களால் தகிக்கப் படுமல்லவா? எனவே இந்த சந்திரனும், கதிரவனும் நேரில் சந்திக்க விடாமல் விதி தடுத்து வந்தது.”

மகாத்மா காந்தி ‘இட்லி’யைப் பார்க்கும் போதெல்லாம், ‘ஸ்ரீரமணாச்ரம இட்லி’யை நினைவுகூர்வார். அதுவே அவர் பகவானையும், அவர் உபதேசத்தையும் இடையறாது நினைவுகூரும் வழி.

ஸ்ரீ ரமணாச்ரமத்தில், சுதந்திர நாளின் முதல்நாள் மிக அக்கறையுடன் இந்திய தேசியக் கொடியினைத் தயாரித்தார்கள். அதன் மத்தியில் உள்ள அசோத சக்கரத்தை பகவானே மிக்க சிரத்தையுடன் வரைந்தார்.

*இந்தியாவின் முதல் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15, 1947ஆம் ஆண்டு அன்று ஆச்ரமத்தில் கொடியேற்றும் நிகழ்வை பகவானே சிறப்புற நடத்தினார். அன்றுமுதல் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று ஆச்ரமத்தில் கொடியேற்று விழா சிறப்புற நடந்து வருகிறது.*

*அதேபோன்று அருணாசல ரமண பகவான் அனுக்கிரகம் பெற்ற பல்வேறு ஞானாசிரியர்கள் பாரதீய ஆத்மிக விகாசத்துக்கும், கலாச்சார மறுமலர்ச்சிக்கும் கருவியாகச் செயல்பட்டனர்.*

*பகவான் தன்மீது ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஸ்வாமி சின்மயாநந்தர் கூறுகிறார்: "என்னுடைய கல்லூரி நாட்கள், எனது அரசியல் பணி, பின்னர் பல்லாண்டுகள் உத்தரகாசியில் எனது ஆசான் ஸ்வாமி தபோவனம் திருவடியில் கற்றவை, கங்கை நதிக்கரையில் நான் பெற்ற ஞான போதம் — இவை அனைத்துமே பல்லாண்டுகட்கு முன்னே அருணாசலத்தில் ஒரு வெப்பமான கோடைநாளில் ஒரு கணநேரத்தில் எனக்கு (பகவானால்) அளிக்கப் பட்டவைதான்."*

*ஸ்வாமி சின்மயாநந்தரின் குருவான தபோவன் மஹராஜும் இளம் பிராயத்திலேயே பகவானைத் தரிசிக்கும் பேறு பெற்றவர். அவர், "மகரிஷி சாந்திக்கும் மௌனத்திற்கும் இலக்கணம். அவரை வியந்து பின்பற்றுவோர் அனைவரும் அவரது தெய்வீக மௌனத்தைத் தம்முள் கொணர முயலவேண்டும். அந்தத் தெய்வீக மௌனம் யாதென அறிவதே 'நான் யார்' என்னும் ஆத்ம விசாரமாம். ஓ நண்பனே! அந்த உள்ளார்ந்த மோனத்தை விசாரித்து அறிந்து, அதிலேயே முற்றும் மூழ்குவாய். உலகில் நீ ஆற்றும் செயல்பாடுகள் அனைத்துமே இந்த ஆழ்ந்த மௌனத்தை அடைவதற்காகவே இருக்கட்டும்" என்று பகர்ந்தார்.*

*ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்வாமி ராஜேஸ்வரானந்தா கூறுகிறார்: "இந்த உலகிற்கு பகவான் கொடையாக அளித்துள்ள இந்த இறைமொழி, அவர் மனித சமுதாயத்திற்கே அளித்துள்ள பெரும் நன்கொடை. இது பரம்பரை பரம்பரையாகப் பயிற்றுவிக்கப் படவேண்டும். மனிதனின் உள்ளார்ந்த தெய்வீகத்தை அவனது ஆன்மிக இயக்கத்தின் மூலம் வெளிப்படுத்தி, அவனது பிரச்சினைகள் அனைத்துமே தீர்த்து வைக்கிறது. அது எல்லா தேசங்களையும் இனங்களையும் ஏன் இந்த முழு உலகையுமே ஒன்றேயான பரமார்த்த சக்தியின் மீது திரும்ப வைக்கிறது."*

*'தெய்வீக வாழ்க்கை சங்க'த்தைத் துவங்கிய ஸ்வாமி சிவானந்தர், ஸ்வாமி சிதானந்தர், கணேஷ்புரியைச் சேர்ந்த ஸ்வாமி முக்தானந்தர் மற்றும் கஞ்சங்காட்டின் சுவாமி ராம்தாஸ் போன்ற ஆன்மிக வழிகாட்டிகள் அனைவருமே பகவானது அனுக்கிரகம் பெற்றவர்களே!*

*தனது வாழ்க்கை மற்றும் உபதேசங்கள் மூலம் பாரத தேசத்தை ஆன்மிக மற்றும் கலாச்சார விழிப்புக்கு உந்துகோலாய்த் திகழ்ந்த இந்தப் பெருமக்களை ஆண்டு ஊக்கம் பெறச்செய்து பகவான் மனித மனதின் எல்லைகளை எல்லாம் கடந்த மிக உயர்ந்த நிலைக்கு அவர்களை எழச் செய்தார். பகவான் அவருள் செலுத்திய ஆன்மிக சக்தி அவருள் துணிவையும், பொறுமையையும் மேலெழுப்பி, பாரதத்தில் வந்து சேர்ந்த ஆதிக்கவாதிகளை எதிர்த்துப் போரிடச் செய்தது. எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போரில், அவர்களை வெற்றி அடையச் செய்து, அகிம்சை மார்க்கத்திலேயே அரசியல் வெற்றி அடையச் செய்தது.*

*(அடுத்த இதழில் முடிவுறும்)*

# வல்லியத்து வாய்ப்பட்ட மான்

**D. தியாகராஜன்**

## குரு தரிசன நூற்றாண்டு

*ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப் பெறும் இவ்வேளையில் ரமண சரித நிகழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த மற்றுமொரு நூற்றாண்டு வைபவம் கடந்த 21/09/2023 வியாழக்கிழமையன்று நிகழ்ந்தது. ஆம்! அது குருவே சீடனை எதிர்கொண்டு அழைத்து அருள் பொழிந்து ஆட்கொண்ட சம்பவமான பகவான்–முருகனார் சந்திப்பு நிகழ்ந்த தினமாகும்.*

*மகான்கள் உலகில் அவதரிக்கும்போது அவர்களின் அவதார ரகசியத்தைப் பாடிப் பரப்புவதற்கென்றே சில பெரியோர்கள் உடன் தோன்றுவார்கள். அவர்கள் எழுதி வைக்கும் நூல்கள்தான் பிற்கால சந்ததியினர்க்கு அந்த மகான்களின் ஞான நெறிகளை அறிந்து அதன்படி நடக்க வழிகாட்டியாக நின்று துணைபுரிகின்றன.*

*ஸ்ரீ பகவானது அருட்புகழைப் பாடுவதற்கென்றே வந்தவர் முருகனார். இவர் எழுதிய ஆயிரக்கணக்கான பாடல்களில் ஸ்ரீ பகவானைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பாடியறியாதவர். ஸ்ரீ பகவான் கூறிய உபதேசங்களின் கருத்து மாறுபடாவண்ணம் எழுத்தோவியமாக வரைந்திருக்கிறார். காலத்தினால் பொருள் சிதைந்து போகாமல் அவற்றைப் பாடல்களில் இசைத்திருக்கிறார். இந்த நூல்கள் பிற்கால சந்ததியினருக்கு ரமண பகவானின் மெய்ப்போதத்தை அறிவதற்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும் நின்று உதவுகின்றது.*

முருகனாரது குருபக்தி ஈடு இணையற்றது. அவர் ஸ்ரீ பகவானது திருச்சந்நிதியில் அமர்ந்திருப்பதையே பெரும் பாக்கியமாகக் கருதியவர். எவருடைய சிபாரிசுமில்லாது சுதந்திரமாக அமர்ந்து அனுபவிக்கக்கூடிய சந்நிதி விசேஷம் ஸ்ரீ பகவானது சந்நிதி ஒன்றில்தான் என்று கூறுவார் முருகனார். இவர் தெய்வீகப் புலமை பெற்றிருந்தும் அடக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்த மூதறிஞர். புகழ் என்னும் வஞ்சனைக்கு அகப்படாத தீரர். பகவானைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பாடியறியாத தலைசிறந்த பக்தரான முருகனாரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரின் முதல் குரு தரிசனம் நடைபெற்ற சம்பவத்தையும் சுருக்கமாக இங்குக் காணலாம்.

### இளமைப் பருவமும் பணியும்:

1890 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுப்பிரமணியம் என்ற இயற்பெயருடன் இராமநாதபுரத்தில் பிறந்தார். பிற்காலத்தில் பெரும் புலவராக, அருட்கவியாக விளங்கிய இவர் தமது ஐந்தாவது வயதுவரை பேசாமல் ஊமையாக இருந்தார். படிப்பை முடித்துத் திரும்பிய இவருக்கு தமிழ் மேதைகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. தமிழ்ச் சொல்லகராதி (Tamil Lexicon) குழுவில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதை இயற்றும் பணியில் ஈடுபட்டு வந்தார்.

### குரு தரிசனம்:

முருகனாரின் மாமனாரான தண்டபாணி சுவாமி ரமண மகரிஷிகளின் பக்தராவார். இவரின் அழைப்பிற்கிணங்க 21–9–1923 வியாழக்கிழமை தனது தாயாருடன் திருவண்ணாமலைக்கு வந்தார்.

அண்ணாமலையாரையும் உண்ணாமுலை அம்மையையும் தரிசித்து பின்னர் கொடிமரத்தின் அருகிலுள்ள மண்டபத்துக்கு வந்து நின்றார். மகான்களை வெறும் கையுடன் சென்று தரிசிக்கக்

*கூடாது என்ற நியதி முருகனாருக்கு நினைவுக்கு வந்தது. எனவே அந்த மண்டபத்திலேயே உட்கார்ந்து கொண்டு ஸ்ரீ பகவான்மீது,*

*பார்வளர் கயிலைப் பருப்பதம் நீங்கிப்*
*பண்ணவர் சூழலை விட்டு*
*வாரொளி மணிபோல் வாசகர் வாக்கை*
*வளர்செவி மடுத்திட விரும்பி*
*ஏர்வளர் பெருந்தண் துறைஅடைந் தாற்போல்*
*இழிசினேன் புன்சொலும் வேட்டுச்*
*சீர்வளர் அருணைச் செழும்பதி சேர்ந்தாய்*
*தேசிக ரமணமா தேவே.*

*பொருள்: புகழ் மிக்க கைலாச பர்வதத்தை விட்டு தேவ கந்தர்வர்களின் சுற்றுச் சூழலையும் விட்டு மாணிக்கவாசகரின் திருவாசகத்தை, உயர்வுடை உன் காதால் கேட்டு மகிழ்ந்திட விரும்பி, வளமைமிக்க திருப்பெருந்துறையை வந்தடைந்தாய். அதைப் போல் இன்று, இழி குணங்களுடைய எனது அற்பமான சொற்களையும் கேட்க விரும்பி, சீரும் சிறப்பும் வளர்ந்தோங்கும் அருணாசலமென்னும் அருள் செழித்து, ஞானம் பழுத்த இத்திருத்தலத்தை வந்தடைந்தாய் தேசிகனாகிய ரமணப் பெருந்தேவே!*

*என்னும் பொருளில் 'ஸ்ரீ ரமண தேசிகப்பதிக'த்தை எழுதினார். தேசிகனை (குருவை) நேரில் காண்பதற்கு முன்பே தேசிகனின் குணங்களையும் லக்ஷணங்களையும் மிக அழகாக இப் பதிகத்தில் விளக்கி, அந்தப் பதிகத்தையே ஸ்ரீ பகவானுக்குக் காணிக்கையாகக் கொண்டு ஸ்ரீ ரமணாச்ரமத்திற்குப் புறப்பட்டார்.*

*அவர் ஆச்ரமம் வந்து சேர்ந்த அதே நேரத்தில் ஸ்ரீ பகவான் மலைக்குச் செல்வதற்காக புறப்பட்டுக் கொண்டிருந்தார். முருகனார் அங்குச் சென்ற நேரமும் ஸ்ரீ பகவான் அறையிலிருந்து புறப்பட்டு வரும் நேரமும் ஒன்றாக நிகழ்ந்தது. குருவே சீடனை*

*எதிர்கொண்டழைப்பதுபோல் அமைந்தது இந்த நிகழ்ச்சி!*

*நல்லா சிரியரருண் ஞானவிழிப் பட்டோர்தாம்*
*வல்லியத்து வாய்ப்பட்ட மான்போலப் –*
*புல்லியல்போய்க்*
*கைவலியங் காணக் கடவரலா லெஞ்ஞான்றும்*
*கைவிடத் தாம்படார் காண். – குருவாசகக் கோவை 284*

*பொருள்: நல் ஆசிரியர் அருள்ஞான விழிப்பட்டோர் தாம் வல்லியத்து (புலி) வாய்ப்பட்ட மான்போலப் புல் இயல் (அற்பத்தன்மை) போய்க் கைவலியம் காணக் கடவர் அலால் எஞ்ஞான்றும் கைவிடத் தாம் படார் காண்.*

*என்னும் முருகனார் அருளிய குருவாசகக் கோவை பாடலுக்கு ஏற்ப ஸ்ரீ பகவானைத் தரிசித்த மாத்திரத்தில் முருகனார் நெக்குருகிச் செயலற்று நின்று விட்டார். ஸ்ரீ பகவானோ தம் திருக்கண்களால் அவரை நோக்கியவாறு அருளைப் பொழிந்து கொண்டே நின்றார். அந்த இருவரின் சந்திப்பும் கண்ணாலேயே ஒன்று கலந்து வாய்ச் சொற்களுக்கு வேலையற்றுப் போயின. சற்று நேரத்திற்குப் பிறகு, தான் எழுதிக் கொண்டுவந்த பதிகம் நினைவிற்கு வரவே, அதை ஸ்ரீ பகவான் முன்னிலையில் படிக்க முயன்றார்.*

*சில வரிகளே படிக்க முடிந்தது. நாக்குழறி வார்த்தைகள் வெளிவராமல் முருகனாருக்குத் தொண்டை அடைத்தது. கண்ணீர் பெருகி, விழித்திரையை மறைத்து மேலே படிக்கமுடியாமல் தடுத்தது.*

*இதைக்கண்ட ஸ்ரீ பகவான், “இப்படிக்கொடும்! நானே படிக்கிறேன்” என்று அவரிடமிருந்து வாங்கித் தாமே படித்து முடித்தார்.*

*முருகனார் தம் கண்களால் ஸ்ரீ பகவானைப் பருகிக் கொண்டேயிருந்தார். அதன் பயனாக உள்ளத்தில்*

*பொங்கிய ஆனந்த அலைகளின் வெளித்தோற்றமாக அவரது கண்கள் நீரைச் சொரிந்த வண்ணமிருந்தன. ஸ்ரீபகவான் படிப்பதைப் பார்த்தபடியே தன்னை மறந்து நின்றார்.*

***அண்ணாமலை ஸ்திரவாசம்:***

*தாயார் காலமானபிறகு முருகனார் சென்னையில் பார்த்து வந்த ஆசிரியர் பதவியையும், குடும்பத்தையும் துறந்து, 1926ஆம் வருடம் ஜுலை மாதம் அண்ணாமலைக்கே நிலையாக வந்து விட்டார். பலாக் கொத்து வாசத்தின்போது, ஒரு அன்பர், ரமண பக்தர்கள் ரமணரை, முருகன், சிவன் என்று பற்பல அவதாரங்களாக விவரிக்கிறார்களே, உண்மையில் அவர் எந்தத் தெய்வத்தின் அவதாரம் என்று முருகனாரிடம் கேட்டார்.*

*அதற்கு முருகனார், அவர் எந்த தெய்வத்தின் அவதாரமும் அல்ல. எல்லா தெய்வங்களுக்கும் ஆதாரமான பரம்பொருள் அவர் என்று விடையளித்தார்.*

*நின்னாலே நின்பாதம் நேரப்பெற்றேன்*
*நேயத்தால் வேங்கடவோ*
*ஆண்டு கொண்டாய் உன்னாலே ஆட்கொள்ளப்*
*பட்ட நாயேன் உணர்விலேன் ஆயினும் உன்*
*அருட் கண்ணோக்கால் தன்னாலே சராசரங்கள்*
*சலிப்ப வன்றித் தாமாகச் சலியாமை கண்ட தாலே*
*என்னாலே யாதொன்றும் இயலாதென்று*
*உன்னிடத்தில் என் கடமையெலாம் ஏற்பித்தேனே*

*ரமண புராணத்தில் தன்னை ஆட்கொண்ட பகவானின் பெருமையை இவ்வாறு எடுத்தியம்புகின்றார்.*

***முருகனார் இயற்றிய பாடல்கள்:***

*‘ரமண சந்நிதி முறை’ – இத் தோத்திர நூல் தமது திருவருள் ஆற்றலை விளக்குவது எனவும் திருவாசகத்துக்கு நிகர் எனவும் உலகோர் ஓதி உய்ய*

வெளிவந்தது எனவும் ஸ்ரீ பகவானே தமது திருவாக்கால் உறுதிப்படுத்தியுள்ளார்.

அறம், பொருள் மற்றும் இன்பம் ஆகிய அனைத்தும் ஸ்ரீ பகவான் திருவடிகளை ஏத்துதலே என்பதனை முருகனார்,

வேங்கடநாத தன்மன் கழலேத்தும் தன்மம் தன்மமே
வேங்கடநாதச் செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே
வேங்கடநாத இன்பன் கழலேத்தும் இன்பம் இன்பமே

என்று இசைக்கின்றார்.

இவ்வாறு ஏத்துவார் பெறும் பயன் யாதோவெனில்,

வைதாரை வாழ்த்துமுயர் வாய்மையான் வேங்கடன்சீர்
ஐதாகப் பேசுவோர்க்கு அறம்பெறல்வீடு எளிது

என்று கூறி ஸ்ரீபகவானிடம் அனைவரையும் ஆற்றுப் படுத்துகிறார்.

'குருவாசகக் கோவை' – ரமணோபதேச மணிகளின் கருவூலமாகத் திகழும் பரமார்த்த தீபம் எனும் குருவாசகக் கோவையில் தம்மை ஆண்ட குருநாதன் உபதேச மாட்சியை முருகனார் இசைத்துள்ளார்.

மேலும் ரமண ஞான போதம், ரமண தேவமாலை, ரமண சரணப் பல்லாண்டு முதலிய 30,000க்கும் மேற்பட்ட தீந்தமிழ்ப் பாக்களை இயற்றி பெருஞ்சாதனை படைத்துள்ளார். பகவான் அவ்வப்போது அருளிய பாடல்களை முருகனார் உள்ளது நாற்பது என்று தொகுத்தார்.

### முருகனாரது விதேஹ கைவல்யம் மற்றும் ஆராதனை:

28–8–1973 ஆவணி அமாவாசை அன்று ஸ்ரீ பகவான் திருவடிகளில் கலந்தார். அன்னாரது சமாதி ஆச்ரம வளாகத்தில் அமைந்துள்ளது.

*ஒவ்வொரு வருடமும் ஆவணி அமாவாசையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அமைந்துள்ள அவரது சமாதியில் சிறப்பாக நடைபெற்று வரும் முருகனாரது ஆராதனை, இவ்வாண்டு 14–9–2023 வியாழக்கிழமை அன்று அனுசரிக்கப்பட்டது. அன்னாரது சமாதிக்கு சிறப்பு அபிஷேக, அலங்காரங்கள் கிரமமாக நடைபெற்றன. அன்பர்கள் முருகனார் இயற்றிய பாடல்கள் மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். முருகனார் இயற்றிய ஸ்ரீ ரமண சந்நிதிமுறை மற்றும் ஸ்ரீ ரமண தேவ மாலை, பாராயணம் 12/9/2023 முதல் 14/9/2023 வரை நடைபெற்றது. 14/9/2023 அன்று 'திருவாசக செம்மல்' மயிலை சத்குருநாத ஓதுவார் அவர்கள் முருகனார் இயற்றியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்கள் சிலவற்றைப் பண்ணிசையில் இசைத்தார்.*

*ஆன்ம ஞான அனுபவம், ஒப்பற்ற தமிழ்ப் புலமை, சிறந்த குருபக்தி, தன்னடக்கம் போன்ற தெய்வீகப் பண்புகளை இயல்பாகவே கொண்ட முருகனார் பகவான் பக்தர்களில் பெரிதும் மதித்துப் போற்றத்தக்கவர் ஆவார். பகவான் அவரை ஆட்கொண்டதை இந்த நூற்றாண்டில் மட்டுமல்லாது இன்னும் பல நூறாண்டுகள் ஆயினும் பகவானையும் முருகனாரின் பக்தியையும் ரமண அன்பர்கள் நினைவுகூர்ந்து போற்றிய வண்ணமிருப்பார்கள் என்பது உறுதி.*

*பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டு*
*பல்லாண்டு நாயைப் பணிகொண்ட தெய்வப்பதத்துக்குப்*
*பல்லாண்டு பாடும்இப் பாக்கியம் ஈந்தாற்குப் பல்லாண்டு*
*பல்லாண்டு பாடுறும் பக்தர் குழாத்துக்குப் பல்லாண்டே.*

# ரமண புராணம்

## ஆகுரா

### பொருள் காணல்

சென்ற இரு இதழ்களில் முன்னுரையாக 'சிவபுராணம்', 'ரமண புராணம்' என்பவை வேறு வேறல்ல; இவை ஒன்றே என்பதாகவும், புராணம் என்பது இங்கு எதைக் குறிக்கிறது என்பதையும் பார்த்தோம். ரமண புராணத்திற்கு பொருளை 'அறிதல்' என்பது அல்ல 'உணர்தல்' என்பதே சரியாகும். "சொல்லிய பாட்டின் பொருள் 'உணர்ந்து' சொல்லுவார்" என்கிறது சிவபுராணம்.

எதையும் உணர வேண்டுமானால் அதுவாக ஆதல் ஒன்றே விடை. 'ரமண புராணம்' ரமணரின் இயல்பை, சுபாவத்தை, ஒழுக்கத்தைக் கூறுகிறது.

ரமண புராணமாக ஆதல் என்பது என்னவென்றால், ரமணரின் இயல்பை, ஆன்ம நிலையை உணர்தல் என்பதே.

ரமண புராணத்தைப் பற்றிய விவேகம் நமக்கு அதை உணர உதவும். அதன் பொருட்டு பொருள் அறிய முயல்கிறோம். எல்லையற்ற பரம்பொருளை மொழி என்னும் வரம்பில் கொணர்ந்து அறிதல் என்பது கடினமே. 'ரமண புராணம்' என்ற ஆன்மீக நூல் இயற்றியவர்கள் பகவானும் அவர் அடியவர் முருகனாரும். அவர்களின் இயல்பான இயைந்த மொழியிலேயே எழுதி உள்ளார்கள். அவர்களுக்கு இயல்பாய் உள்ள பொருள் நமக்குக் கடினமாக இருப்பதற்கு காரணம் நமது முதிர்ச்சி இன்மை. 'நைந்து அழி கனியால் நலன் இலை, பதத்தில் நாடி உட்கொள்

நலம் அருணாசலா' என்ற பிரார்த்தனையுடன் 'ரமண புராண'த்தின் பொருள் அறிய முயல்வோம்.

## ரமண புராணம் (வரிகள் 1–8)

நமோ ரமணாய நலம்பெற வாழ்க
விமோசன மெய்யன் விரைமலர்த்தாள் வாழ்க
அடிமுடிக்கு உண்டாய அநாதித் தொடர்பின்
விடமுடியா மெய்ம்மறந்து விட்டுஉழல்புன் நாயேனைப்
பத்திமால் ஏற்றி அகப்பட்டி மனத்து ஊனமறு
சுத்தியால் அங்கவடித்துத் துய்யசுடர் தோற்றித்
தவவிரத ஞானத் தழல்வேள்வி வேட்பித்து
அவபிரத நோக்க அமுதுஆட்டி ஆண்டபிரான் (8)

குருபாத மகிமை:

நமோ ரமணாய நலம்பெற வாழ்க
விமோசன மெய்யன் விரைமலர்த்தாள் வாழ்க

விமோசன மெய்யன் – பிறப்பு இறப்பு சுழலினின்று விமோசனம் வழங்கும் மெய்யன் ரமணன்.

விரை மலர்த்தாள் – மணம் கமழும் மலர்ப் பாதங்கள்

பொருள்: ரமணரின் நலம் தரும் நாமம், அவரது மணம் கமழும் மலர்ப் பாதங்கள் வாழ்க.

இறைவனின் பாதம் மலர் போன்றது என அநேக இடங்களில் கூறப்படுகிறது. இது எங்ஙனம் என்று பார்ப்போம்.

நடராஜர் நடமிடும் சிலைகளைக் காணும்போது, நடராஜர் பாதம் முயலகன் (அகங்காரம்) எனும் அரக்கனின் மீது நடமிடும். ஆனால் அரக்கனிடம் இருந்து எந்த வலியும் வெளிப்படாது. அரக்கன் முகத்தில் ஆனந்தம் மலர்ந்து தலைதூக்கும். இறைவனின் பாதம் மலர் என்பதால் அங்கு வேதனை தெரிவதில்லை. அந்த நற்றாள் பட்டவுடன் அங்கு அகங்காரம் ஒடுங்கி ஆனந்தம் மலர்ந்து ஓங்குகிறது,

*ஆத்மா விளங்குகிறது. அகங்கார ஓசை அடங்கும் இடத்தில் தன் முகம் காணத் தோன்றும் அதிமோகன மெய்யோன் என்று பின்வரும் ரமண புராண வரிகள் இப்படித்தானே வர்ணிக்கிறது. "அவன் தலையில் விரிமலர்ப் பதத்தினை வைத்தே அருணாசலா வெளிவராய்" என்று ரமணர் அருணாசல பதிகத்தில் பிரார்த்தனை வைப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதய மன்றகம் அசலமாக நடமிடும் அருணமலை எனும் எல்லையற்ற அருள் ஒளிக் கடல்தான் அந்த விரை மலர்ப் பாதம்.*

*திருவள்ளுவர் திருக்குறளில் வாலறிவன் நற்றாள் களைப் போற்றுதல் பற்றி*

***கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்***
***நற்றாள் தொழாஅர் எனின். (2)***

*என்றும் "பற்றுக பற்று அற்றான் தாளினை" என்றும் வலியுறுத்துகிறார். நாம் கற்பது என்பது விவேகம் அடையவே. நாம் விவேகம் அடைய பகவான் ரமணர் 'உள்ளது நாற்பது' உபதேச நூலில் முதல் 26 பாடல்களில் விவேகத்தைப் பற்றி விளக்குகிறார். விவேகத்தின் பயன், விசாரத்தில் எத்தனம் கொண்டு, விமோசனம் அளிக்க வல்ல வாலறிவனின் நற்றாளினைத் தொழுது ஏற்றுதலே...*

*"நமோ ரமணாய நலம் பெற வாழ்க! விமோசன மெய்யன் விரை மலர்த்தாள் வாழ்க!" என்று வாழ்த்துவதால் மீண்டும் பிறக்கும் நிலை வராது. பின்வரும் ரமண புராண வரிகள் இதை உறுதி செய்கின்றன*

***வாழ்த்துநரை வானோரால் வாழ்த்துவிப்போன் ஆகிஅவர்***
***பாழ்த்த நரலைப்பிறவிப் பாற்றுவோன் தாள்வெல்க!***

***(144-5)***

*ரமணரின் மலர்த்தாள்களை வாழ்த்துவோர்களை, அருள் ரமணர் வானவர்களைக் கொண்டு வாழ்த்த வைத்து, அவர்களைப் பிறப்பு இறப்பு சுழற்சி யினின்றும் விடுவித்து விடுவான். நாம் பிறவி எடுத்தது அகந்தை உருவாகிய இந்தப் பாழ்த்த நரலைப் பிறப்பு இறப்பினின்று விடுவிக்கவே. நாம் வந்த வேலை இதுதான். மணிவாசகர் சிவபுராணத்தில் இதனை, "போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்" என்கிறார். 'ரமண புராணம்' மற்றும் 'சிவபுராணம்' முழுவதுமாக குருபாத மகிமையைக் கூறுவதாகவே அமைந்துள்ளது. ரமணனின் இயல்புகளைக் குறிப்பிட்டுக் கூறி, ஆங்காங்கே அவரின் பொற்றாள்கள் போற்றப் படுகின்றது.*

*பகவான் அருளிய 'உள்ளது நாற்பது' உபதேச நூலின் மங்கல வெண்பா ஒன்றிலேயே 40 பாடல்களின் சாரம் அடக்கம் என்று கூறப்படுகிறது. அது போன்றே ஆன்ம நாட்டம் உள்ள ஒரு சாதகனுக்கு ரமண புராணத்தில் உள்ள குருபாத துதியும், குரு நாம வாழ்த்தலும் மட்டுமே விமோசனம் அளிக்கப் போதுமானது.. "நாதனே உனை நான் மறக்கினும் நா சொல்லும் உந்தன் நாமமே!"*

## அநாதித் தொடர்பு

*அடிமுடிக்கு உண்டாய அநாதித் தொடர்பின்*
*விடமுடியா மெய்ம்மறந்து விட்டுஉழல்புன் நாயேனைப்*
*பத்திமால் ஏற்றி அகப்பட்டி மனத்து ஊனமறு*
*சுத்தியால் அங்கவடித்துத் துய்யசுடர் தோற்றித் (3-6)*

*அடி முடி – அடிமுடி என்றால் வரம்புக்கு உட்பட்டது ஜீவனைக் குறிக்கும்*

*அநாதி – அநாதி என்றால் நிலையான வரம்பிலா ஆன்மாவைக் குறிக்கும்*

இவை இரண்டிற்கும் உண்டாய தொடர்பு சித்-ஜடக் கிரந்தி எனப்படும் மாயா முடிச்சு, அதாவது அகந்தை.

தொடர்பினை விடமுடியாது என்பது அகந்தையை விடமுடியாது.

*மெய்மறந்து* – தன் உண்மையான தன்னிலையை, மெய்யான உணர்வை மறந்து

*விட்டு உழல்கின்ற புன் நாயேனை* – உண்மை சொரூபத்தை மறந்து விட்டு அலைகின்ற நான், கீழான நாயேன் கடையன்

*பத்திமால் ஏற்றி* – பக்தியெனும் போதையில் (இன்ப) ஏற்றி

*அகப்பட்டி மனம்* – அகமாகிய பட்டி, வேண்டியவாறு ஒழுகும் மனம், அலைபாயும் மனம்

*ஊனம் அறு* – குறைகள் நீக்கி

*சுத்தியால் அங்கவடித்து* – தூய்மையின் அங்கமாக்கி, தூய்மை ஆக்கி

*துய்ய சுடர் தோற்றி* – தூய்மையான மெய்சுடர் தோற்றுவித்து, மெய் அகச்சுடர் ஏற்றுவித்து (மெய்யின்புணர்வு )

எல்லைகள் அற்ற மெய்ப்பொருளாகிய தன் உண்மை சொரூபம் மறக்கப்பட்டு, அகந்தை எனும் மாயா தொடர்பினால் எல்லைக்குட்பட்ட ஜீவனாக தன்னை அபிமானிக்கும் இந்தக் கள்ள மனத்தை, அதன் இந்தக் குற்றம் நீங்க தூய்மையின் அங்கமாகவே வடித்து மெய்ச்சுடர் ஏற்றுவித்து

இங்கு பகவான் அருளிய 'ஏகான்ம பஞ்சக' வரிகள் நினைவிற்கு வருகின்றது.

*தன்னை மறந்து தனுவே தானாய் எண்ணி*
*எண்ணில் பிறவி எடுத்து இறுதி – தன்னை*

*உணர்ந்து தான் ஆதல் உலக சஞ்சாரக்*
*கனவில் விழித்தலே காண். — ஏகான்ம பஞ்சகம், 1*

*பொருள்: தனது உண்மை சொரூபத்தை மறந்து தேகமே தானாக நினைத்து, கணக்கில் அடங்கா பிறவிகளை எடுத்து, முடிவில் தனது சொரூபத்தை உணர்ந்து அதுவே தானாக நிற்றல் என்பது எவ்வாறு என்றால் ஒருவன் தனது தூக்கத்தில் உலகம் முழுதும் அலைந்து திரிவதாகக் கண்ட கனவில் இருந்து விழித்துக் கொள்வதற்கு சமம்.*

*தவவிரத ஞானத் தழல்வேள்வி வேட்பித்து*
*அவபிரத நோக்க அமுதுஆட்டி ஆண்டபிரான் (7-8)*

*தவ விரத – தவம் விரதம்*

*ஞானத் தழல் – ஞானாக்கினி*

*வேள்வி – ஒரு காரியம் நிறைவேற வேண்டி செய்யும் யாகம்*

*வேட்பித்தல் – யாகத்தை செய்வித்தல்*

*அவபிரதம் – வேள்விக்குப் பின்னர் நீராடல்*

*நோக்கம் – நோக்கத்தால்*

*அமுதாட்டி ஆண்டல் – நீராடல் என்பதுபோல் அமுதாடல், நீராட்டி என்பது நீராடவைத்தல்*

*அமுதாட்டி என்பது நீருக்குப் பதிலாக அமுதுகொண்டு குளிப்பாட்டல்*

*அருள் அமிர்தத்தால் ஆட்டி ஆட்கொள்ளுதல்.*

*தவம், விரதம் செய்வித்து, ஞான அக்னி (அஞ்ஞானத்தை எரிக்க) மூட்டி வேள்வியைச் செய்வித்து அஞ்ஞானத்தை நீக்கிய அந்த வேள்விக்குப் பின்னர் அவபிரத நோக்கத்தால், நின் அருள் அமுதக் கடலில் குளிப்பாட்டி சித்தம் குளிர வைத்து ஆண்ட பிரான்.*

*இந்த வரிகளில் கூறப்படும் செய்தி யாதெனில், எல்லாம் அவன் செயல் என்பதாக, நான் செய்கிறேன் என்ற கர்த்தத்துவம் இன்றி, அவனே அனைத்தையும் செய்விக்கிறான் என்பது நூல் இழைபோல் பின்னிப் பின்னிவருகிறது.*

*கர்த்தத்துவம் போய்க் கருமம் மூன்றும் கழலும் நித்தமாம் முக்தி நிலை உணர்த்தப்படுகிறது. தான் தானாய் விளங்குவது.*

மேலும் பொருள் காண்போம்

# இனிவரும் திருநாட்கள்

## 2023

| | | | |
|---|---|---|---|
| *நவம்பர்* | 12 | *ஞாயிறு* | *தீபாவளிப் பண்டிகை* |
| *நவம்பர்* | 17 | *வெள்ளி* | *கார்த்திகை தீப விழா தொடக்கம்* |
| | 26 | *ஞாயிறு* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 28 | *வியாழன்* | *பகவான் 144ஆவது ஜயந்தி* |

## 2024

| | | | |
|---|---|---|---|
| *ஜனவரி* | 15 | *திங்கள்* | *பொங்கல் பண்டிகை* |
| | 25 | *வியாழன்* | *சின்னஸ்வாமிகள் ஆராதனை* |
| *பிப்ரவரி* | 29 | *வியாழன்* | *சுந்தரம் ஐயர் தினம்* |
| *மார்ச்* | 8 | *வெள்ளி* | *மஹாசிவராத்திரி* |
| | 15 | *வெள்ளி* | *ஸ்ரீவித்யா ஹோமம்* |

## **பௌர்ணமி நாட்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *அக்டோபர்* | 28 | *சனி* | *அதிகாலை 04.17* | 29 | *ஞாயிறு* | *அதிகாலை 1.53* |
| *நவம்பர்* | 26 | *ஞாயிறு* | *மாலை 3.53* | 27 | *திங்கள்* | *மதியம் 2.46* |
| *டிசம்பர்* | 26 | *செவ்வாய்* | *காலை 5.45* | 27 | *புதன்* | *காலை 6.05* |

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம நூற்றாண்டு விழா வைபவ நிகழ்ச்சிகள்

### அம்பாசமுத்திரம், கல்யாணி திரையரங்கம் (9-4-2023)

*ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக ஏப்ரல் 9, 2023 ஞாயிற்றுக்கிழமையன்று காலை மணி 9 முதல் மதியம் 1 மணிவரை, கல்யாணி திரையரங்கம், அம்பாசமுத்திரத்தில் ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாகக் கொண்டாடப் பெற்றன.*

*காலை நாதஸ்வரம், வேதபாராயணம், தேவாரம், அக்ஷரமணமாலை பாராயணத்திற்குப் பின்னர் திரு. ஜெய்சங்கர் நாராயணன் அவர்கள் 'ரமணரின் பகவத்கீதை' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். ஸ்ரீரமணாச்ரம தலைவர் Dr. வேங்கட். S. ரமணன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். ஸ்ரீ ரமணாச்ரம அறங்காவலர் திரு. S. கிருஷ்ணன் அவர்கள் முடிவுரை ஆற்றினார். ஆரத்தி, அன்னப் பிரசாதம் பாலித்தலுடன் விழா இனிதே நிறைவுற்றது.*

### ஸ்ரீ அருணை அரங்கம், கோயம்புத்தூர் (16-7-2023)

*ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக ஜுலை 16, 2023 ஞாயிற்றுக்கிழமையன்று காலை மணி 9 முதல் மதியம் 1 மணிவரை, ஸ்ரீ அருணை அரங்கம் (512, காமராஜ் சாலை, வரதராஜபுரம், ESI மருத்துவமனை எதிரில்) கோயம்புத்தூரில் ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாகக் கொண்டாடப் பெற்றன.*

*விழாவின் தொடக்கமாக குத்துவிளக்கு ஏற்றிய பின்னர் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணத்துடன் விழா தொடங்கியது.*

*ஸ்ரீ ரமணாச்ரம தலைவர், Dr. வேங்கட். S. ரமணன் அவர்கள் சிறப்புரையாற்றினார். 'வேதாந்தத்தே வேரற விளங்கும் வேதப்பொருள்' என்னும் தலைப்பில் திரு. ஜெய்சங்கர் நாராயணன் அவர்கள் உரையாற்றினார்.*

*'திருவாசக செம்மல்' மயிலை திரு.சத்குருநாத ஓதுவார் அவர்களின் தேவார இசைக்குப் பின் ஸ்ரீ ரமணாச்ரம அறங்காவலர் திரு. S. கிருஷ்ணன் அவர்கள் முடிவுரை ஆற்றினார். ஆரத்திக்குப் பின்னர் அனைவருக்கும் அன்னப் பிரசாதம் பாலிக்கப்பட்டது.*

*நிகழ்ச்சியினை பேராசிரியர் P. நடராஜன் அவர்கள் தொகுத்து வழங்கினார். விழாவினை கோவை ரமண அன்பர் திரு. பரமகுரு அவர்கள் சிறப்பாக ஏற்பாடுகள் செய்திருந்தார்.*

## நேரு நினைவு அருங்காட்சியகம் & நூலகம், தீன் மூர்த்தி பவன், புதுதில்லி (4-8-2023)

*தேசிய விழிப்புணர்வு மற்றும் இந்தியாவின் ஆன்மிக பாரம்பரியத்திற்கு பகவான் ரமண மகரிஷியின் பங்களிப்பு குறித்து ஸ்ரீ ரமணாச்ரம தலைவர், Dr. வேங்கட் S. ரமணன் அவர்கள் உரைநிகழ்த்தினார்.*

*இந்நிகழ்ச்சி ஆகஸ்ட் 4, 2023 வெள்ளிக்கிழமையன்று புதுதில்லி, தீன்மூர்த்தி பவனில், நேரு நினைவு அருட்காட்சியகம் மற்றும் நூலகத்தில் மதியம் 3 மணியளவில் நடைபெற்றது.*

## தெலுங்கு சொற்பொழிவு (14-8-2023 முதல் 18-8-2023)

*ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக ஆகஸ்ட் 14, 2023 திங்கட்கிழமை முதல் ஆகஸ்ட் 18, 2023 வெள்ளிக்கிழமை வரை ரமணாச்ரமத்தில் பிரம்மஸ்ரீ சாமவேதம் ஷண்முக சர்மா அவர்கள் 'அருணாசலமு*

*ரமணாசலமு' என்னும் தலைப்பில் தெலுங்கில் சொற்பொழிவு ஆற்றினார்.*

*ஸ்ரீரமணாச்ரம ஆடிட்டோரியத்தில் நிகழ்ந்த இந்தத் தெலுங்கு பிரவசனத்தில், திரளான அன்பர்கள் கலந்துகொண்டு சர்மா அவர்களின் சரளமான ரமண பக்தி உரையைக் கேட்டுக் களிப்பெய்தினர்.*

## ரமணாலயம், கட்டுவன், யாழ்ப்பாணம், இலங்கை (ஆகஸ்ட் 20, 2023)

*ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக ஆகஸ்ட் 20, 2023 ஞாயிற்றுக்கிழமையன்று காலை மணி 9 முதல் மதியம் 1.30 மணிவரை, ரமணாலயம், கட்டுவன், யாழ்ப்பாணம் இலங்கையில் ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*காலை 9 மணியளவில் 'அருணாசல அக்ஷரமணமாலை' பாராயணம் செய்யப்பட்டது. சுவாமி குணாதீதானந்த சரஸ்வதி, சின்மயா மிஷன், இலங்கை அவர்கள் 'இலங்கையில் ரமணாலயம்' எனும் தலைப்பில் உரையாற்றினார். ஆச்ரம அறங்காவலர் திரு. S. கிருஷ்ணன் அவர்கள் 'சர்வதேச ரமண நிலையங்களின் பங்கு' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.*

*'ரமண பகவானின் ஆத்ம விசாரத்தின் முக்கியத்துவம்' எனும் தலைப்பில் ஸ்ரீரமணாச்ரம தலைவர், டாக்டர் வேங்கட் S. ரமணன், அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மதியம் 12 மணியளவில் ரமண மலர் ஆராதனைக்குப் பின்னர் வந்திருந்த அனைவருக்கும் அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## நூற்றாண்டு விழா, நங்கநல்லூர்

*ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா மற்றும் பகவான் ரமண மகரிஷிகளின் அருணை விஜய (செப்டம்பர் 1) நாளின் ஒரு அங்கமாக, சென்னை நங்கநல்லூரில் அமைந்துள்ள மாடர்ன் சீனியர் செகண்டரி பள்ளியில், ஸ்ரீ ரமணாச்ரம தலைவர் டாக்டர் வேங்கட் S. ரமணன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.*

*விழாவின் துவக்கமாக பள்ளிக் குழந்தைகள் பக்தியுடனும் இனிமையாகவும் அருணாசல அக்ஷரமணமாலையை இசைத்தனர். அதைத் தொடர்ந்து நங்கநல்லூர் ரமண சத்சங்கக் குழுவினர் ஆச்ரமத் தலைவருக்கு பாராட்டு மற்றும் மரியாதை செய்தனர்.*

*பின்னர் ஆச்ரமத் தலைவர் அவர்கள் தன்னில் நிலைத்திருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றினார். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## அருணை விஜய நாள், செப்டம்பர் 1

*சுமார் 127 வருடங்களுக்கு முன்பு இதே செப்டம்பர் முதல் நாள், 1896ஆம் ஆண்டு தனது 16ஆவது வயதில், ஞானத் துறவியாக, திருவண்ணாமலைக்கு பகவான் ரமண மகரிஷிகள் வந்தடைந்தார்.*

*ஆகஸ்ட் 29ஆம் நாள் மதுரையில் துவங்கிய வேங்கடராமனது யாத்திரை, இரயில் பயணம், பத்து மைல் நடை, பயணச் செலவுக்காகக் காதுக் கடுக்கனை வைத்து பணம் பெறுதல் எனப் பல இன்னல்களுக்குப் பிறகு, ஞானத் தந்தையாம் அருணாசலேசனை செப்டம்பர் 1ஆம் நாள் அடைந்தவுடன் முடிவுக்கு வந்தது. அதன்பின் பகவான் அருணாசலத்தை விட்டு அகன்று வேறெங்கும் செல்லவில்லை.*

*அருணை விஜய நாளை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் மதுரையில் இருந்து திரளான அன்பர்கள் ஆச்ரமத்திற்கு வருவது வழக்கம். அவ்வாறே இவ்வருடமும் மதுரை அன்பர்கள் ஆச்ரமத்திற்கு திரளாக வந்திருந்தனர். ஆச்ரம அன்பர்கள் மற்றும் மதுரையில் இருந்து வந்திருந்த அன்பர்கள் என அனைவருமாக அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று 'அருணாசல அக்ஷரமணமாலை' பாராயணம் செய்து அண்ணாமலையாரை வழிபட்டனர். ஆச்ரமத்திலும் சிறப்பு அபிஷேகம் மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றன.*

## புத்தக வெளியீடுகள்

*மேலும் ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக, பகவான் அருணையை அடைந்த நாளான செப்டம்பர் முதல் நாளன்று சில புதிய நூல்களும் 'பஜே ரமண நாமம்-2' எனும் ஒலித் தொகுப்பும் வெளியிடப்பட்டன.*

**வெளியிடப்பட்ட தமிழ் நூல்கள்:**

*1) ஸ்ரீ ரமண மகரிஷிகள் சொன்ன ஆன்மிகக் கதைகள் — Spiritual Stories as told by Sri Ramana Maharshi என்னும் ஆங்கில நூலின் தமிழ் மொழியாக்கமாகும். இது பகவான் அன்பர்களுக்கும், அணுக்கத் தொண்டர்களுக்கும் கூறிய பல்வேறு ஆன்மிகக் கதைகளின் தொகுப்பாகும்.*

*2) அண்ணாமலை எனும் கிரிஉருவாகிய கிருபைக் கடல் — அருணாசல தல வரலாறு, அருணாசலத்தின் அருமை பெருமைகள், கிரிபிரதட்சிண மகிமை, அருணாசலேஸ்வரர் கோயில் வரலாறு, அமைப்பு, திருவிழாக்கள், அங்குள்ள சந்நிதிகள், கோயில் கும்பாபிஷேக விவரங்கள், அண்ணா மலையானை அண்டி அருள் பெற்ற பக்தர்கள், மகான்கள், ஞானிகள் ஆகியோரின் விவரங்கள் போன்ற பல விஷயங்களை இந்நூல் தன்னுள் கொண்டுள்ளது. இந்நூல் அருணாசலத்தைப் பற்றி அறிய அன்பர்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பது திண்ணம்.*

**வெளியிடப்பட்ட ஆங்கில நூல்கள்:**

*1) Dr. கார்லோஸ் லோபஸ் எழுதிய Ramana's Children — நாம் அனைவரும் உண்மையில் பகவானின் குழந்தைகள் என்பதால் இந்தப் புத்தகம் அனைவருக்கும் பயன்படும். குழந்தை உளவியலாளரால் எழுதப்பட்ட இந்நூலில் குழந்தைகளை எவ்வாறு வளர்ப்பது என்பது பற்றிய குறிப்புகள் உள்ளன.*

*2) To See God is to Become God — பகவானது அன்பர் சப்-ரிஜிஸ்திரார் நாராயண ஐயர் அவர்களின் பகவானுடனான அனுபவங்களை இந்நூல் பதிவு செய்கிறது.*

**வெளியிடப்பட்ட குஜராத்தி நூல்கள்:**

*1) Hun Kon Chhun — பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் உபதேச நூலான, அன்பர் சிவப்பிரகாசம் பிள்ளை தொகுத்தளித்த 'நான் யார்?' புத்தகத்தின் குஜராத்தி மொழிபெயர்ப்பு.*

*2) Sri Ramana Vaani — 'Maharshi's Gospel' என்னும் ஆங்கில நூலின் குஜராத்தி மொழிபெயர்ப்பு.*

**பஜே ரமண நாமம்-2 — ஒலித்தொகுப்பு:**

*திருமதி சங்கீதா சுவாமிநாதன், பகவான் ரமணர் மீது பாடி வெளியிட்ட பக்திப் பாடல்களின் ஒலித் தொகுப்பு 'பஜே ரமண நாமம்' என்னும் பெயரில் சில ஆண்டுகளுக்குமுன் வெளியானது. தற்போது அதன் இரண்டாம் தொகுப்பு, 'ஸ்ரீ ரமண சந்நிதி முறை' பாடல்களை உள்ளடக்கிய ஒலித் தொகுப்பாக வெளிவந்துள்ளது.*

*இவையனைத்தும் ஸ்ரீரமணாச்ரம புத்தகாலயத்திலும், Online Bookstore-இலும் கிடைக்கும்.*

## ஸ்ரீமுருகனார் ஆராதனை
## முருகனார் மந்திரம், இராமநாதபுரம் (14-9-2023)

*ஸ்ரீமுருகனாரது ஆராதனை இவ்வாண்டு செப்டம்பர் 14 அன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்பட்டது. அதைப்போன்றே இராமநாதபுரம் முருகனார் மந்திரத்திலும், முருகனாரது ஆராதனை சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. பேராசிரியர் சுப்புராஜ் அவர்கள் முன்னிலையில் அக்ஷரமணமாலை மற்றும் சந்நிதிமுறைப் பாடல்கள் இசைத்தலுக்குப்பின், மதுரை திருப்புகழ் சபையினரின் திருப்புகழ் பஜனை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ராமகிருஷ்ண மடத்தின் விவேகானந்த ஆச்ரமத்தின் நிர்வாகி சிவராமன் அவர்கள் நிறைவுரை ஆற்றினார். விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப் பட்டது.*

## புஷ்பலதா பள்ளி, தபோவன் அரங்கம், திருநெல்வேலி (17-9-2023)

*செப்டம்பர் 17, 2023 ஞாயிற்றுக்கிழமையன்று காலை மணி 9.30 முதல் மதியம் 12.30 மணிவரை, திருநெல்வேலி புஷ்பலதா பள்ளி, தபோவன் அரங்கத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமம் நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.*

*காலை 9.30 மணியளவில் குத்துவிளக்கு ஏற்றிய பின்னர் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணத்துடன் விழா இனிதே தொடங்கியது.*

*ஸ்ரீ ரமணாச்ரம தலைவர், டாக்டர் வேங்கட். S. ரமணன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பிரபல பாடகர் திரு. பிராபாகர் குழுவினரின் ரமண இசை நிகழ்ச்சிக்குப் பின்னர் ஸ்ரீ ரமணாச்ரமம் திரு. S. கிருஷ்ணன் அவர்கள் முடிவுரை ஆற்றினார். காலை சிற்றுண்டி மற்றும் பகவான் ரமண ஆரத்திக்குப் பின் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அன்பர்கள் அனைவருக்கும் மதிய அன்னப் பிரசாதமும் பாலிக்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை நெல்லை ரமண அன்பர் திரு. சம்பத் அவர்கள், பள்ளிகள் மற்றும் ரமண அன்பர்களுடன் இணைந்து சிறப்பாகச் செய்திருந்தார்.*

## நியூயார்க், அமெரிக்கா

*ஸ்ரீ ரமணாச்ரமத்தின் நூற்றாண்டு விழா வைபவத்தின் ஓர் அங்கமாக கடந்த, செப்டம்பர் 30, 2023 சனிக்கிழமையன்று அமெரிக்க நேரப்படி காலை மணியளவில் (EST) 9.00 சிறப்பு நிகழ்ச்சிகள் நியூயார்க்கில் நடைபெற்றன.*

*இந்நிகழ்ச்சியில், ஸ்ரீ ரமணாச்ரமத் தலைவர், டாக்டர். வேங்கட் S. ரமணன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.*

*விழா நிகழ்ச்சிகளுக்கு ஒருங்கிணைப்பாளராக திரு. மோகன் ராமஸ்வாமி அவர்கள் செயலாற்றி, ஏற்பாடுகளை சிறப்புற செய்திருந்தார்.*

**அனைத்து நிகழ்ச்சிகளின் காணொளிகளையும் ஆச்ரம YouTube Channel வாயிலாகக் காணலாம்.**

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

SRI RAMANASRAMAM
TIRUVANNAMALAI
CENTENARY
CELEBRATIONS

# ஸ்ரீ ரமணாஸ்ரமம் நூற்றாண்டு விழா – மதுரை

**நவம்பர் 4, 2023 சனிக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 9.00 மணிவரை**

## ஸ்ரீ ஸத்குரு ஸங்கீத சமாஜம், லக்ஷ்மி சுந்தரம் ஹால்

**15A, கோகலே ரோடு, தல்லாகுளம், மதுரை – 625 002**

**(தமுக்கம் மைதானம் எதிரில்)**

ஸ்ரீ ரமணாஸ்ரமம் நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

<u>நிகழ்ச்சி நிரல்:</u>

குத்துவிளக்கு ஏற்றுதல்

அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம்

துவக்கவுரை: ஸ்ரீ ரமணாஸ்ரம தலைவர், டாக்டர் வேங்கட். S. ரமணன்

"இன்றைய சூழலில் ரமணரின் அருளுபதேசம்" என்ற தலைப்பில்
சிறப்புரை: டாக்டர். V. திருப்புகழ் I.A.S., (Retd)

ரமண இசை: திரு. கார்த்திக் ராஜா மற்றும் குழுவினர்

முடிவுரை: திரு. S. கிருஷ்ணன், அறங்காவலர், ஸ்ரீ ரமணாஸ்ரமம்

அன்பர்கள் நேரில் கலந்து கொண்டு ஸ்ரீ பகவானின் அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

அனுமதி: அழைப்பிதழ் மூலம் மட்டுமே

ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை

# ரமண கேந்திர செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், மைலாப்பூர், சென்னை
## அருணை விஜய விழா, 3-9-2023

*வேதகோஷம், பிரார்த்தனைக்குப் பின்னர் ஸ்ரீமதி வசந்தா ராகவன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து, பேபி சஹானா, திரு. வித்யாசாகர், எழுத்தாளர் சுரேஷ்குமார், 'ரமணோதயம்' ஆசிரியர் திரு. ராம் மோஹன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர். நட்ராஜ், 'கலைமகள்' ஆசிரியர் கீழாம்பூர் திரு. சங்கரசுப்ரமணியன் அவர்கள் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். டாக்டர் A.V. ராஜகோபாலன் அவர்கள் நன்றி நவின்றார். விழாவின் சிறப்பம்சமாக கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் திரு. சங்கரசுப்ரமணியன் அவர்கள் எழுதிய 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்னும் நூல் வெளியிடப்பட்டது.*

*அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

### ஸ்ரீரமண சந்நிதிமுறை முற்றோதல்

*ஸ்ரீரமணாச்ரம நூற்றாண்டு விழா, முருகனார்-பகவான் சந்திப்பு நிகழ்ந்து நூற்றாண்டு மற்றும் முருகனாரது 50ஆவது ஆராதனை விழாவினையொட்டி தொடர் முற்றோதல் 23 ஜூலை, 20 ஆகஸ்ட், 23-24 செப்டம்பர், 8 அக்டோபர் 2023 ஆகிய தினங்களில் ரமண அன்பர்களால் பாராயணம் நடைபெற்றது. பெருந்திரளாக அன்பர்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. அனைத்து நாட்களும் அன்பர்களுக்கு அன்னப் பிரசாதம் வழங்கப்பட்டது.*

### ஸ்ரீ ரமண சந்நிதிமுறை பண்ணிசை பயிற்சி வகுப்புகள்

*அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் முற்பகல் 10.00-11.00 மணியளவில் திருவாசக செந்நாவலர் திரு. சத்குருநாத ஓதுவார் பயிற்சி வகுப்புகள் அளிக்கிறார். ஒரு வருடத்திற்கும் மேலாக இவ்வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வகுப்பிலும் வெவ்வேறு பாடல்கள் பயிற்சி அளிக்கப் படுவதால், எந்த வெள்ளிக்கிழமையன்றும் அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம்.*

## நவராத்திரி விழா 2023 — சிறப்புப் பாராயணங்கள்

*நவராத்திரி விழாவினையொட்டி 15 அக்டோபர், ஞாயிறன்று 9.00 மணிமுதல் 12.30 மணிவரை லலிதா சஹஸ்ரநாமம், தேவி மாஹாத்மியம் மற்றும் மஹிஷாசுரமர்தனி ஸ்தோத்திரம் பாராயணம் செய்யப்படும். அக்டோபர் 20, 21 மற்றும் 22 (வெள்ளி, சனி, ஞாயிறு) அனைத்து நாட்களும் மதியம் 3 மணி முதல் 5 மணி வரை காவ்யகண்ட கணபதி முனிவர் இயற்றிய 'உமா சஹஸ்ரம்' பாராயணம் நடைபெறும். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.*

## ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை
## அருணை விஜய விழா, 1-9-2023

*மாலை 5 மணிக்கு ரமண அஷ்டோத்திர பூஜை, அருணாசல அக்ஷரமணமாலை பாராயணத்துடன் தொடங்கிய விழாவில், சிறப்பம்சமாக திருமதி. தீபா மகேஷ், திரு. முரளி, திரு. அனந்தராமன், திரு. சிவஞானம், டாக்டர் S.R. ரமணன், வானிலை ஆய்வாளர் மற்றும் பல அன்பர்கள் தங்களது அருணாசல அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

---

Ramanodhayam — Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




அருணை விஜய விழா, முருகனார் ஆராதனை மற்றும்
ஸ்ரீரமணாச்ரம நூற்றாண்டு நிகழ்வுகள் அம்பாசமுத்திரம், கோவை,
ஸ்ரீலங்கா, நங்கைநல்லூர், திருநெல்வேலி புகைப்படத் தொகுப்பு

Registered with the Registrar of Newspaper for India RNI No.: TNTAM/2001/5542

